# பாரதியின் கவித்துவம்

ஆசிரியர்

`ஞானி'

(கோவை திரு கி. பழனிச்சாமி)

மகாகவி சுப்பிரமணியபாரதியார் அறக்கட்டளை

திருவள்ளுவராண்டு 2033, மாசி - மார்ச்சு 7-3-2002

இலக்கியத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

# பாரதியின் கவித்துவம்

ஆசிரியர்

`ஞானி'

(கோவை திரு கி. பழனிச்சாமி)

மகாகவி சுப்பிரமணியபாரதியார் அறக்கட்டளை

திருவள்ளுவராண்டு 2033, மாசி - மார்ச்சு 7-3-2002

இலக்கியத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
## தஞ்சாவூர்

முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
இலக்கியத்துறை


28.2.2002

## முன்னுரை

தமிழக அரசு தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ள பாரதி அறக்கட்டளை வருவாயிலிருந்து நிகழ்த்தப்பெற்ற பாரதி அறக்கட்டளைச் சொற்பொழிவில் 7.3.2002 அன்று மாலை பாரதியின் கவித்துவம் என்னும் தலைப்பில், கோவை ஞானி (பழனிச்சாமி) அவர்கள் இப்பொழிவை நிகழ்த்தவும், இப்பொழிவு நூல் 7.3.2002 அன்று காலையே வெளியிடப் பெறவும் தமிழ் இலக்கியத்துறை ஏற்பாடு செய்தது. அவ்வேற்பாட்டின்படி இன்று இப்பொழிவாகக் கேட்கின்றீர்கள்; நூலைக் காண்கின்றீர்கள்.

திரு ஞானி அவர்கள் இக்கால இலக்கியங்களில் மிகுதியும் ஆய்ந்து அறிஞர் பலரின் கருத்தை ஈர்த்தவர். முற்போக்கான சிந்தனையும், நடுவுநிலைமையான திறனாய்வும் கடும் உழைப்பும், பழைய புதிய இலக்கியங்களையெல்லாம் துருவிக் கற்கும் ஆர்வமும் கொண்டவர். இப்பொழிவுநூல் அவரது ஆழமான திறனாய்வு நோக்கை வெளிக்காட்டும். பாரதியைக் குறித்து ஆய்வு செய்வோர்க்கு இந்நூல் மிகவும் பயனளிக்கும். இந்நூலை அச்சுருக்கொணரப் பணிசெய்த அனைவருக்கும் நன்றி உரியது.

தஞ்சாவூர்
28.02.2002

கு.வெ. பாலசுப்பிரமணியன்

## பொருளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நானும் என் பாரதியும் | 1 |
| 2. | பாரதி பெருங்கவிஞர் | 7 |
| 3. | பாரதி நெறியில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் | 13 |
| 4. | தமிழ்ச் சாதியின் அமரத்துவம் | 23 |
| 5. | புதிய பாரதி தேவை | 27 |


### பிற்சேர்க்கை


| | | |
|---|---|---|
| 1. | கண்ணன் பாட்டில் பாரதியின் கவித்துவம் | 31 |
| 2. | பாரதியும் பார்ப்பனியமும் | 37 |

# 1. நானும் என் பாரதியும்

தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையினர் இந்த ஆண்டு பாரதி அறக்கட்டளைச் சொற்பொழிவை நான் நிகழ்த்த வேண்டும் என்று என்னைக் கேட்டபொழுது, என் உடல் நலக்குறைவு கருதி நான் முதலில் மறுத்த போதிலும் பிறகு ஒப்புக்கொண்டேன். பாரதியின் கவிதைகளோடு வாழ்ந்த தலைமுறையினரின் நானும் ஒருவன். பாரதியின் கவிதைகள் குறித்து முப்பதாண்டுகளுக்கு மேலாக எனக்குள்ளும் சில அனுபவங்கள் உண்டு. இவற்றைப் பதிவு செய்வதற்கு ஒரு வாய்ப்பு என்ற முறையில் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த பெரும் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டேன். என் நன்றிகள் அனைவருக்கும் உரியவை.

பாரதியின் வாழ்க்கையில் சில ஏற்றத்தாழ்வுகள் இருந்ததைப் போலவே அவரது கவிதை வரலாற்றிலும் ஏற்றத்தாழ்வுகள் இன்றளவும் தொடர்கின்றன. பாரதியைத் தமிழ்ச் சமூகம் ஏற்றுக் கொண்டது என்பதில் ஐயத்திற்கு இடம் இல்லை. இதற்காக வ. ரா. திருலோக சீத்தாராம் முதற்கொண்டு எத்தனையோ அறிஞர்கள், கவிஞர்கள் போராடியிருக்கின்றனர். பாரதியாரைத் தமிழ்ச் சமுகத்தில் நிலைநிறுத்துவதில் பாரதிதாசன் அவர்களின் பங்கு பெரியது.

1936 வாக்கில் பாரதி ஒரு மகாகவியா? இல்லையா? என்ற விவாதம் எழுந்தது. கு.ப.ரா. சிட்டி போன்றவர்கள் சில சான்றுகளை முன்வைத்து 'மகாகவி' தான் என்றனர். இந்த விவாதத்தில் பிறிதொரு சமயம் சி.சு.செல்லப்பாவும் கலந்து கொண்டார். ஜீவா முதலிய முற்போக்காளர்கள் மீண்டும் பாரதியைப் பற்றி அழுத்தத்தோடு பேசியபொழுதுதான் பாரதி ஒரு 'மகாகவி' என்ற சித்திரம் முழுமை பெற்றது என்று சொல்லமுடியும்.

தொடக்கத்தில் பாரதி ஒரு 'தேசிய கவி' என்ற அளவில் தான் ஏற்றுக் கொள்ளப்பட்டார். மணிக்கொடி காலத்தில் தான் பாரதியின் இலக்கியம் ஏற்கப்பட்டது. பாரதியை ஒரு வேதாந்தக் கவி என்ற அளவில்தான் இராஜாஜி மதிபபிட்டார். டி.கே.சி.யின் பார்வை பாரதி பக்கம் திரும்பவே இல்லை. தமிழ்ப் புலவர்களும் பாரதியை நெடுங்காலம் ஏற்கவில்லை. பாரதியைப் பெருங்கவிஞர் என்று பாராட்டிய முதல் தமிழ் அறிஞர் வையாபுரியார்.. மார்க்சியர்களாகிய பெரியவர் ஜீவா, ஆர்.கே.கண்ணன், இரகுநாதன் தா.பாண்டியன் ஆகியவர்களின் கைக்குப் பாரதி வந்தபொழுதுதான் பாரதியின் சமூக உணர்வு புரட்சிகரமான பார்வை முதலியவை முன்வைக்கு வந்தன.

பாரதியின் கவிதை வரலாற்றில் இன்னொன்றையும் இங்குக் குறிப்பிட வேண்டும். திராவிட இயக்கத்தவருக்கு உடன்பாடாக இருக்கமுடியாது. விடுதலைப் போரில் பாரதியின் சார்பு, திராவிட இயக்கத்தவருக்கு ஒரு நெருடல். இவற்றோடு பாரதி பார்ப்பனர். இக்காரணங்களையும் மீறி இன்னொன்றும் முக்கிய காரணமாக இருந்தது. பாரதியாரைப் பொதுவுடைமை இயக்கத்தினர் வசப்படுத்திக் கொண்டனர் என்பது இந்தக் காரணம்.

பொதுவுடைமை இயக்கத்தினரும், திராவிட இயக்கத்தினரும் தமிழகச் சூழலில் வக்கிரத்தோடு முரண்பட்டனர். இந்தப் போக்கு தமிழகத்திற்கு அன்றும் நன்மை செய்யவில்லை. இன்றும் நன்மை செய்வதாக இல்லை. திராவிட இயக்கத்தினர் தமிழின் பெருமை முதலியவற்றை விரிவாகப் பேசினர். தமிழ்த்தேசிய இனம் என்ற உட்கிடக்கையோடு இவர்கள் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றெல்லாம் முழங்கினர். இந்திய தேசத்தோடு, இந்திய தேசியத்தோடு தொடக்கம் முதலே தம்மைப் பிணைத்துக் கொண்ட பொதுவுடைமையரால் தமிழ்த்தேசியத்தை ஏற்க இயலவில்லை.

தேசிய இனம் என்ற கருத்து மார்க்சியத்தோடு ஒத்த கருத்துத்தான் என்ற போதிலும், இந்த வக்கரிப்பிலிருந்து இவர்களால் விடுபட முடியவில்லை.

பாரதிதாசன் திராவிட இயக்கத்தின் கவிஞர். பாரதியார் பொதுவுடைமை இயக்கத்தின் கவிஞர். பாரதியை பாரதிதாசன் என்றும் கொண்டாடியதில் தவறவில்லை. இருந்தபோதிலும் பாரதியார் ஒரு பக்கம், பாரதிதாசன் இன்னொரு பக்கம் என்ற இழுபறி நிலை ஏற்பட்டது. பாரதிதாசன் நூற்றாண்டு விழாவுக்குப் பிற நிலைமைகள் மாறி இருக்கின்றன. பாரதிதாசனை இப்பொழுது

பொதுவுடைமை இயக்கத்தின் ஒரு பகுதியினர் அவரது அசலான புரட்சிகர உணர்வுக்காகப் பாராட்டத் துவங்கி உள்ளனர்.

இந்த இடத்தில் 1968-69 ஆண்டுகளில் நாங்கள் வெளியிட்ட "புதிய தலைமுறை" இதழில் பாரதிதாசன் பற்றி, அவரது ஆழ்ந்த தமிழ் உணர்வு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, புரட்சிகர உணர்வு ஆகியவை குறித்து நாங்கள் வெளியிட்ட கட்டுரைகள் குறித்துச் சொல்லவேண்டும். ஜீவா முதலியவர்களிடமிருந்து பாரதிக்குள் செயல்பட்ட பேருணர்வுக்கு நாங்களும் வசப்பட்டு இருந்தோம் என்பது உண்மைதான். ஆனால் அன்று இருந்த பொதுவுடைமை இயக்கத்தினரின் மார்க்சியம் பற்றிய புரிதலில் இருந்து நாங்கள் பெருமளவு வேறுபட்டோம். "புதிய தலைமுறை" ஆசிரியர் குழுவில் இருந்த நாங்கள் முறையாகத் தமிழ் கற்றவர்கள். ஆழ்ந்த தமிழ் உணர்வுடையவர்கள். பாரதிதாசனை எங்களால் ஒதுக்கி வைக்க இயலாது. 1960களின் தொடக்கத்தில் நாங்கள் எப்படி இருந்தபோதிலும் 1970-களுக்கு வரும்பொழுது தமிழை முதன்மைப்படுத்துவதில் நாங்கள் முன்னிலையில் நின்றோம். பொதுவுடைமையரில் ஒரு பகுதியினர் இன்றளவும் பாரதியை மட்டுமல்லாமல், பாரதிதாசனையும் ஏற்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். அவர்களின் மார்க்சியம் இப்படி ஒரு எதிர்நிலையை எடுக்க வைத்திருக்கிறது. திடீரெனத் தமக்குள் தமிழுணர்வை அண்மைக் காலத்தில் கண்டு கொண்டவர்கள் குறித்தும் நம் அனைவருக்கும் தெரியும்.

இன்னொரு அனுபவத்தையும் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கக்கூடும். பாரதி பற்றிய ஆய்வுகள் இன்றளவும் தொடர்கின்றன. பாரதி பற்றிய வாழ்க்கை வரலாறு, கவிதை வரலாறு முதலியவை பற்றி ஏராளமான விவரங்களோடு தொடர்ந்து நூல்கள் வெளியாகின்றன. பாரதி பற்றிய நய உரைகள், விளக்க உரைகள் கூடுதலாகவே வெளியிடப்படுகின்றன. சில திறனாய்வுகளும் இல்லாமல் இல்லை. எங்கள் மரியாதைக்குரிய அறிஞர் கோ.கேசவன் பாரதி குறித்து ஆய்வு நூல் ஒன்றையும் சில கட்டுரைகளையும் வெளியிட்டார். கடலூரில் பாரதி சிறைப்படுத்தப்பட்டபோது பாரதி, பாரதியாகவே நடந்து கொள்ளவில்லை. ஒரு கோழையைப் போல சிறை அதிகாரிகளுக்கு அவர் எழுதிக் கொடுத்தார். சென்னையில் காந்தியடிகளைப் பாரதியார் சந்தித்தார் என்பதற்கு ஆதாரம் இல்லை. பாரதியின் பாட்டனார் ஒரு நிலக்கிழார். தந்தையார் ஒரு தொழில் அதிபர். பாரதி தெய்வ நம்பிக்கை உடையவர் இப்படி இருக்க அவர் எப்படி சோசலிசவாதியாக இருக்கமுடியும். அவரிடம் எப்படி விஞ்ஞான சோசலிசத்தை இனம் காணமுடியும்.

1917 பிப்ரவரியில் நடைபெற்ற இரஷ்யப்புரட்சியை மட்டுமே அவர் பாடியிருக்க முடியும்.

இப்படி எல்லாம் கேசவன் எழுதினார். "நிகழ்" இதழில் நான் மறுப்பு எழுதினேன். கேசவன் ஒப்புக்கொள்ளவில்லை. வியக்கத்தக்க முறையில் ஓர் அற்புதமான சான்று எனக்குக் கிடைத்தது. இரகுநாதன் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றில் பாரதியார் ஆங்கிலத்தில் எழுதிய "தி நியூ ஏஜ்" என்ற கட்டுரையை சொற்பொழிவில் மேற்கோள் காட்டியிருந்தார். இந்தியாவின் நிலச்சிக்கலைத் தீர்க்க கர்னல் வெஜ்வுட் ஒரு கருத்துரையை முன் வைத்திருந்தார். கிராமத்தில் உள்ள நிலக்கிழார்கள் விவசாயக் கூலிகளுக்கு உணவு உடை முதலியவற்றுக்கு உறுதி தரவேண்டும். இம்முறையில் நிலக்கிழார்கள் தர்மகர்த்தாக்களைப் போலச் செயல்பட வேண்டும் என்பது அவர் கருத்துரை.

நிலச்சிக்கலைத் தீர்க்க பாரதி ஒரு கட்டுரையில் இந்தக் கருத்துரையை ஆதரித்து எழுதியிருந்தார். சிக்கல் இதனால் தீராதென்பது வெளிப்படையான உண்மை. வெஜ்வுட் கருத்தை ஆதரிக்கும் பாரதியார் எப்படிச் சமதர்மவாதியாக இருக்கமுடியும் என்று கேசவன் எழுதினார். இரகுநாதன் அவர்கள் மேற்கோள் காட்டிய "தி நியூ ஏஜ்" கட்டுரையில் பாரதியார் எழுதியிருந்தார். "சிக்கலைத் தீர்க்க ஒரு சமரசத்திற்கு முயற்சி செய்வோம். சிக்கல் தீராதென்றால் நிலக்கிழார்களிடமிருந்து நிலத்தைப் பறிமுதல் செய்வோம்." இக்கருத்தை "நிகழ்" இதழில் மொழிபெயர்த்து முன் அட்டையில் வெளியிட்டேன். நண்பர் கேசவனிடமிருந்து பதில் இல்லை. நண்பர் கேசவன் அவர்களை நான் குற்றம் சொல்வதற்கில்லை. புரட்சிவாதிகள் என்றுத் தம்மைக் கருதிக் கொள்பவர்கள் வட்டாரத்தில் இப்படிச் சில கருத்துக்கள் இன்றளவும் நீடிக்கின்றன.

பாரதி கவிதை குறித்து எனது சில அனுபவங்களையும் இங்குச் சுருக்கமாக குறிப்பிடலாம். விடுதலைப் போராட்டத்தின இறுதிக் கட்டத்தில் நான் தொடக்கப் பள்ளியில் மாணவனாக இருந்தேன். எங்கள் தலைமை ஆசிரியர் எங்களுக்கும் விடுதலை உணர்வை ஊட்டினார். என் தந்தையாருக்கும் இத்தகைய உணர்வு உண்டு. விடுதலை பெற்ற நாளில் நாங்களும் கொடி ஏந்தி ஊர்வலம் வந்தோம். காந்தி, நேரு, சுபாஷ் சந்திரபோஸ் முதலியவர்கள் எங்கள் நெஞ்சில் பதிந்திருந்தனர். நேருவின் சோசலிசக் கொள்கைக்கு நான் வசப்பட்டிருந்தேன். பொதுத்துறை நிறுவனங்கள்

முதலியவை இந்தியாவைப் பொருளியல் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்குமென எங்கள் தலைமுறையினர் நம்பினர். சோவியத் உதவியை மனமாரப் பாராட்டினோம். இப்பொழுதெல்லாம் பாரதியோடு நாங்கள் நெருக்கமாக இருந்தோம். அதன்பிறகுதான் நிலைமைகள் தலைகீழாக மாறின. பாரதியாரின் கனவுகள் நிறைவேறுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. எனினும் பாரதியின் கனவுகளோடுதான் நாங்கள் வாழ்ந்தோம். ஜீவா முதலியவர்களின் பேச்சுக்கள் எங்களுக்குள் கனல் ஏற்றின. தொடக்கத்தில் பெரியார் இயக்கத்தோடு நாங்கள் முரண்பட்டதன் காரணமாகவும் பாரதியை எங்கள் நெஞ்சில் நிறைத்துக் கொண்டோம். பாரதிக்குள் இருந்த கவிதை ஊற்றுக்கள் எங்களுக்குள்ளும் சுரந்தன.

பாரதி வழியாகத்தான் தேசமென்றும், விடுதலையென்றும், சமதர்மமென்றம், பெண் விடுதலையென்றும், சாதி ஒழிப்பு என்றும் எத்தனையோ உண்மைகளை எங்கள் தலைமுறையினர் செறித்துக் கொண்டோம். பாரதிதான் எல்லாவற்றுக்கும் வாயிலாக இருந்தார். பழைய வேதங்களை நம் காலத்துக்கு ஏற்றபடி பாரதி பொருள்படுத்தினார். பாரதியின் கிருதயுகம், சமதர்மம் அன்றி வேறு இல்லை. பாரதியின் தமிழ்ப்பற்று அற்புதமானது. பாரதியின் ஆவேசம் எல்லோரையும் போல எங்களையும் கவர்ந்தது. வாராதுபோல் வந்தமாமணியாகிய பாரதியைக் குறை சொல்வதற்கு எங்கே இடம்? பாரதி எங்களுக்குள் நிறைந்திருந்தார். பாரதியை எத்தனை முறை கற்றிருப்போம். பாரதியால் எங்கள் வாழ்வு அழகுபெற்றது.

என்னுடைய இன்னொரு அனுபவத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டும். தொடக்க காலம் முதலே கடவுள் நம்பிக்கையோடு நான் போராடிக் கொண்டிருந்தேன். தாகூர் என்றும், விவேகானந்தர் என்றும் தேடித் தேடிப் படித்தேன். அரவிந்தரையும் கற்றேன். அத்வைதம் ஒரு பேருண்மை என்று எனக்குத் தோன்றியது. கல்லூரியில் படிக்கும்பொழுது தியானத்தில் ஈடுபட்டேன். அற்புதமான சில அனுபவங்களைப் பெற்றேன். பிரபஞ்சமும் நானும் ஒன்று என்ற அனுபவம் எனக்கு வாய்த்தது. எல்லாமே பிரம்மம். பிரம்மம் அன்றி வேறெதுவும் இல்லை. ஒரு மூன்று மாதங்கள் மட்டும்இந்த அனுபவத்திற்குள் ஆழ்ந்திருந்தேன். அப்புறம் இதிலிருந்து விடுபட நேர்ந்தது. இந்த அனுபவத்தைப் பொருளியல், வாழ்வியல் சூழலி ல் வைத்துப் புரிந்து கொள்ள சில ஆண்டுகள் நான் முயன்றேன்.

பாரதி எனக்கு மேலும் நெருக்கமானார். இந்த அனுபவத்தின் திறவுகோலாக விவேகானந்தர் தென்பட்டார். பரமஹம்சர்

முன்னிலையில் விவேகானந்தருக்கும் இந்த அத்வைத அனுபவம் ஏற்பட்டது. பரமஹம்சர் கேட்டுக் கொண்டபடி இந்த அனுபவத்திலிருந்து கீழ் இறங்கி மக்கள் பணிக்கென அவர் சென்றார். இந்தப் பேரனுபவத்தைச் சமூகம் மற்றும் பொருளியல் சூழலில் வைத்து அவர் பொருள்படுத்தினார். எல்லாமே ஒன்று என்றால் ஆங்கிலேயன் ஏன் இந்தியாவை ஆளவேண்டும். பிராமணனுக்கு ஏன் தலைமையிடம்? வைசியர்கள் ஏன் அரசாள வேண்டும். இனிப் பாட்டாளிகள் அரசாளட்டும். சாதிகளுக்கு அர்த்தம் இல்லை. சமதர்மம் தவிரப் பேரறம் என்று இன்னொன்று இருக்கமுடியாது. உண்மை தான். தியான நிலையில் அத்வைதம் எனத் தொடங்கினால் அப்புறம் அந்த அனுபவத்தைச் சமுதாயச் சூழலில், பொருளியல் சூழலில் வைத்துப் பொருள்படுத்த வேண்டும். இதுதான் அறிவாளர் செயல். சமூகத்தின் மேல் அக்கறையுடையவனின் செயல். இதைத்தான் பாரதியும் செய்தார். இந்தப் பேரனுபவம் பாரதிக்குள் எத்தகைய அற்புதங்களைப் படைத்திருக்கிறது. தன்னை மகான் நிலைக்கு உயர்த்திக் கொண்ட அரவிந்தரை இவரால் மதிக்க இயலவில்லை. ஏழைகளோடு பாரதியார் தோழமை கொண்டார்.

யாருக்குள்தான் பிராமணத் தனித்தன்மை இல்லை. இந்தப் பூணூலை யாரும் தரிக்கலாம். சாதி உயர்வு சொல்லும் பார்ப்பனன் வெறுக்கத்தக்கவன். நந்தன் ஒரு பார்ப்பனன். இப்படியெல்லாம் பாரதி எழுதினார், பேசினார், வாழ்ந்தார். மேலும் பாரதி ஒரு சித்தர். நம் தமிழர் மரபின் மையம் எனச் சித்தர்களைத்தான் சொல்லமுடியும். இதன் காரணமாகவும் பாரதி எனக்குள் வசப்பட்டார். பாரதிக்கு நான் வசமானேன்.

இன்னொன்றையும் இப்பொழுது இங்குக் குறிப்பிட வேண்டும். பாரதியைப் பார்ப்பனர்தான் என்றுசாதிக்கும் போக்கு இன்று திராவிடர் இயக்கத்தவர் மத்தியில் உச்சத்தில் இருக்கிறது. இது எந்தளவுக்குச் சரி என்று நாம் ஆராயவேண்டும். அன்றியும் உலகமயமாதல் முதலிய போக்குகள் தீவிரப்பட்டுள்ள இன்றைய நிலையில் பாரதியின் இடம் என்ன என்பதையும் நாம் ஆராய வேண்டும். இவ்வகை ஆய்வுகளை இறுதியில் பார்க்கலாம்.

# 2. பாரதி பெருங்கவிஞர்

பாரதியார் மகாகவி என்பதைத் தானும் மெய்ப்பிக்கும் முறையில் சி.சு.செல்லப்பா எழுதிய கட்டுரையில், குறிப்பிட்ட திறனாய்வுக் கருத்தொன்றை இங்குக் குறிப்பிடலாம். தமிழில் திறனாய்வு இன்னும் வளரவில்லை என்றும், தமிழ் இலக்கியத்தில் பாரதியின் இடம் என்ற ஒன்று இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், பாரதியின் இடம் பற்றித் தீர்மானிக்கும்பொழுதுதான், தமிழ் இலக்கியத்தின் நெடுங்காலப் பாரம்பரியம் பற்றியும் சிலத் தீர்மானங்களுக்கு வரமுடியும் என்றும் செல்லப்பா குறிப்பிட்டார்., தேர்ந்த திறனாய்வாளர் என்று செல்லப்பாவை இனம்காண இவரது கருத்து அருமையானது என்பதில் ஐயமில்லை. அன்றியும் தமிழ் இலக்கிய ஆய்வுக்கு வழிதிறந்து வைக்கிறார் என்பதையும் நம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

மகாகவி என்ற சொல்லை விடுத்து இக்கட்டுரையில் இனி, பெருங்கவிஞர் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். தமிழில் பாரதி ஒரு பெருங்கவிஞர். இருபதாம் நூற்றாண்டு உலக வரலாற்றில் மட்டுமல்லாமல், இந்தியா மற்றம் தமிழகத்திலும் மிக முக்கியமான நூற்றாண்டு.

பத்தொன்பது நூற்றாண்டுகளின் வரலாற்று வளர்ச்சியின் இன்னொரு பாய்ச்சலை நிகழ்த்தியது இருபதாம்நூற்றாண்டு. அறிவியல் துறையிலும், சமூகவியல் களத்திலும் எத்தனையோ சாதனைகள் இந்த நூற்றாண்டில் நிகழ்ந்தன. இவை குறித்து இங்கு விரிவாகப் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டு பாரதி பற்றிய ஆய்வுக்குள் வருவோம்.

இருபதாம் நூற்றாண்டின் குழந்தை என்று பாரதியை நாம் குறிப்பிடலாம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழியல் ஆய்வு, தமிழக வரலாறு, அரசியல் வரலாறு முதலியவற்றில் பல மேதைகளை இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில் நாம் காண்கிறோம். உ.வே.சாமிநாத அய்யர் என்று தொடங்கி, மறைமலையடிகள்,

சோமசுந்தர பாரதியார், மனோன்மணியம் சுந்தரனார் என்று இன்னும் பலரைக் குறிப்பிடலாம். வரலாற்று ஆய்விலும் சீனிவாச அய்யங்கார்,. இராமச்சந்திர தீட்சதர் என்று தொடங்கி இன்னும் சிலரைக் குறிப்பிடலாம். வையாபுரி மட்டுமல்லாமல் கா. அப்பாத்துரை போன்றவர்களையும் இந்த நூற்றாண்டுதான் தோற்றுவித்தது. பெரியார் என்ற பேரெழுச்சியை இந்த நூற்றாண்டுதான் கண்டது. விடுதலைஇயக்கத்தில் வ.உ.சி. முதலியவர்களோடு பாரதியார். இலக்கியத்தில் மணிக்கொடி இயக்கம். இத்தகையவர்களின் பேரெழுச்சி காரணமாகத்தான் தமிழகத்தின் எல்லாக் களங்களிலும் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. 1960-கள் வரை இந்தப் பேரெழுச்சியின் தாக்கங்களை நாம் பார்க்கிறோம். பிறகு இந்த எழுச்சி வற்றியது, தமிழக வரலாற்றில் ஒரு பெரும் அவல நாடகம்.

பாரதிக்குள் வந்து சேர்ந்த பலமுனைப்பட்ட ஆக்கங்கள் குறித்துச் சுருக்கமாகப் பார்க்கலாம். இந்தியாவில் எழுந்த விடுதலை இயக்கத்தின் பாதிப்பு இவருக்குள் திலகர் வழியே ஏற்பட்டது. ஆன்மீகமும், அரசியலும் கலந்த பேருணர்வை இவருக்குள் விவேகானந்தரும், நிவேதிதாவும் ஏற்படுத்தினர். இவருக்குள் எழுந்த கவிதை ஊற்றை வடக்கிலிருந்து காளிதாசர், மேற்கிலிருந்து ஷெல்லி, கிழக்கிலிருந்து தாகூர் முதலியர் திறந்து வைத்தனர். அப்புறம் இவர்களோடு வால்ட்விட்மன், தமிழ் இலக்கிய மரபில் வள்ளுவர் முதலியவர்கள். அப்புறம் சித்தர்கள், சமகாலத்தில் அரவிந்தர் முதலியவர்கள், இதழியியல் துறையில் பாரதி ஈடுபட்டதன் காரணமாக உலகளாவிய அரசியல் இயக்கங்கள் பற்றி இவருக்கு ஆழ்ந்த பிடிப்பு. இரஷ்யப் புரட்சி இவருக்குள் ஏற்படுத்திய அதிர்வலைகள், பெண்களுக்குள் சக்தியை இவர் தரிசனம் செய்தது, பொதுவுடைமைக் கொள்கை. சாதிகள் தேவை இல்லை. அறிவே தெய்வம். இந்தியா இவருக்கு பாரததேவி என்றும் பராசக்தி என்றும் பெருங்காட்சியாக விளைந்தது. உலகளவிலான அறிவியல் ஆக்கங்கள் வழியே இவரது சக்தி தரிசனம். இப்படி பலதிசைப்பட்ட, பன்முகப்பட்ட பேராற்றல்கள், பார்வைகள் முதலியவற்றின் குவியமையமாக பாரதியார் இயங்கினார்.

இருபதாம் நூற்றாண்டுக்கு முன்னர் இப்படியொரு குவி மையம் நமக்கு வாய்க்கவில்லை. அளவுகடந்த இந்த ஆற்றல்களைத் தாங்கும் வல்லமை பாரதியின் உள்ளத்திற்கு இருந்தது என்பது உண்மைதான் ஆனால் உடலுக்கு இல்லை. வறுமை முதலிய எத்தனையோ தொல்லைகள். முப்பத்தெட்டு வயதுவரை அவர் வாழ்ந்ததேகூட பெரும் வியப்புத்தான்.

இருபதாம் நூற்றாண்டுச் சூழலில்தான் பாரதியார் ஒரு பெருங்கவிஞராக எழுச்சி பெற்றார் என்பதை இப்படித்தான் நம்மால் புரிந்து கொள்ள இயலும். இருபதாம் நூற்றாண்டில்தான் தெய்வங்கள் கேள்விக்குள்ளாயின. சமயங்கள் தம்மைப் புதுவிளக்கம் செய்துகொண்டன. மன்னர்கள் இனித் தேவையில்லை. மனிதர்கள் தம்மை நிர்வாகம் செய்து கொள்ளமுடியும். பொருளியல் சக்திகளுக்குள் இருந்த புதிர்கள் அவிழ்ந்தன. தொழில் வளர்ச்சி இல்லாமல் சமூக வாழ்வின் முன்னேற்றம் இருக்க முடியாது. ஒட்டுமொத்தமாகப் பழங்காலத்தில் இருந்து மனிதர்களுக்கு விடுதலை தேவை. ஒடுக்கப்பட்ட மனிதர் அனைவருக்கும் விடுதலை தேவை. தேசங்களுக்கு மட்டுமல்லாமல், தெய்வங்களுக்கும் விடுதலை. சமதர்மம் இந்த நூற்றாண்டின் புதிய வேதம். மனிதனுக்குள் இருக்கிற கவித்துவ ஊற்றுக்கள் திறந்து கொள்கிற காலம் இந்த நூற்றாண்டு. உலகம் முழுவதையும் உறவுக் கயிற்றால் இணைக்க முடியும். அறிவியல் இதற்கு வழி திறக்கிறது.

பெருங்கவிஞர் பாரதியை இந்தச் சூழலில் வைத்துத்தான் அவரை இனம் காண்கிறோம், மதிப்பீடு செய்கிறோம். பாரதி ஒரு பெருங்கவிஞர் என்று மெய்ப்பிப்பதற்கு மேலும் சான்றுகள் தேவையில்லை. பாரதிக்குள் பொங்கிய கவித்துவ வீச்சை அவரது கவிதைகள் அனைத்திலும் நாம் காண்கிறோம். ஊழிக்கூத்து என்ற ஒரு கவிதைபோதும் என்று சில திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து பாரததேவி என்ற புதிய தெய்வத்தை அவர் படைத்தார். அவருக்குள் கண்ணனும், புத்தரும், இயேசுவும், அல்லாவும் ஒரு தெய்வத்தின் பல்வேறு திருமுகங்கள். விநாயகரைப் பற்றிப்பாடும்பொழுதும் கிருதயுகம் பற்றி அவர் எழுச்சி கொள்கிறார். உலகில் வறுமை முதலியவை இல்லாமல் செய்வேன் என்கிறார். முப்பத்து முக்கோடி மக்களுக்கும் பொதுவுடைமை என்று கூறுகிறார்.அவருக்கு எல்லாமே சக்தியின் வடிவங்கள் மற்றும் இயக்கங்கள். மாகாளி பராசக்தி கடைக்கண் வைத்தால் ஆஹா என்று எழுந்ததுதான் யுகப்புரட்சி என்று இரஷ்யப் புரட்சியை வரவேற்கிறார். பாரதக் கதையைப் புதுமை செய்கிறார். பாஞ்சாலிக்குள் இந்தியர்ஏற்க வேண்டிய சபதத்தைச் சொல்கிறார். குயிலின் காதல் கதையை அற்புதமாய்ப் பாடுகிறார். பாரதி கவிதையின் உச்சம் என்று கண்ணன் பாட்டை நாம் பொருள்படுத்தமுடியும்., இப்பாடல்களில் வரும் கண்ணன் நம் காலத்திற்குரிய கண்ணன்.

பாரதி ஒரு பெருங்கவிஞர் என்று சொல்லுவதற்குரிய முறையில் பெரும் காவியம் என ஒன்றை அவர் பாடவில்லை. ஆனால்

காவியப் பரிமாணத்தோடு அவருக்குள் பெரும் காட்சிகள் கவிதைகளாய் விளைந்துள்ளன. கண்ணன் பாட்டை, நம்மால் ஆழ்ந்து நோக்கமுடியுமானால் ஒருங்கிணைந்த கோலத்தின் ஒரு காவியமாகப் பார்க்க முடியும். பாஞ்சாலிக்குள் புதிய பாரதம் பொங்கி எழுகிறது. பாரதியின் கவிதைகளில் பாரத தேசம் ஒரு பெருங்காட்சியில் ஒன்றாகிறது. கங்கையும்காவிரியும் இணைகின்றன. நந்தன் பார்ப்பனன் ஆகிறான். புதுமைப் பெண் புதிய கீதை முழங்குகிறாள். வேடிக்கை மனிதனாய், கூற்றுக்குத் தான் இரை ஆக மாட்டேன் என்று பாரதி முழங்குகிறார். விடுதலை பெற்ற இந்தியா அவருக்குள் தரிசனம் பெறுகிறது. ஏழை என்றும், அடிமை என்றும் இனி எவரும் இல்லை என்கிறார். இவருக்குள் எழும் அக்னிக் குஞ்சு பெருங்காட்டை எரித்து அழிக்கிறது. இப்படி எத்தனைக் சான்றுகளை நம்மால் தொகுக்க முடியும். உறுதியாகச் சொல்லமுடியும் பாரதியார் ஒரு பெருங்கவிஞர்.

உலகத்துப் பெருங்கவிஞர் வரிசையில் பாரதி எளிதாக இடம்பெறமுடியும். மீண்டும் ஒன்றை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். இருபதாம் நூற்றாண்டின் எத்தனையோ ஆக்கக் கூறுகள் வழியே நாம் பாரதியைப் பார்க்கிறோம். பாரதி ஒரு பெருங்கவிஞர் என்பதற்கும் இருபதாம் நூற்றாண்டு மனிதரைத்தான், சமூகத்தைதான் நாம் ஆதாரமாக்குகிறோம். இத்தகைய வரையறைகளிலிருந்துதான் பாரதியாரைப் பெருங்கவிஞர் என்கிறோம். இருபதாம் நூற்றாண்டில் நாம் திரட்டிக்கொண்ட பார்வையில் இருந்துதான் முன்னைய வரலாற்றை, மெய்யியல்களை, பண்பாடுகளை, பொருளியலை கவிதைகளை/இலக்கியங்களை மதிப்பீடு செய்கிறோம். இப்படி ஒரு பார்வையை இருபதாம் நூற்றாண்டு சூழலலிருந்து நாம் வரித்துக் கொண்டதன் விளைவாகத்தான் சங்க இலக்கியங்களைப் போற்றுகிறோம். இயேசு ஒரு விடுதலைப் போராளியாகிறார். ஷேக்ஸ்பியர் நமக்கு நெருக்கமாகிறார். இப்படித்தான் நம்மை நாமே பார்த்துக் கொள்கிறோம். படைத்துக் கொள்கிறோம்.

ஒரு பெருருங்கவிஞருக்குள் வரலாறு தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. பழைய வரலாறு, புதிய வரலாற்றுக்கு இடம் கொடுக்கிறது. சமூகம் தன்னை இன்னொரு முறை புரட்டிக் கொள்கிறது. இருட்காலம் விலகிப் புதிய வெளிச்சங்கள் தெரிகின்றன. சமூகத்தில் புதிய பண்பாடு உருக்கொள்கிறது. மனிதன் தன்னைப் புதியதாய்ப் படைத்துக் கொள்கிறான். இந்த வகையில் ஒரு பெருங்கவிஞனின் தோற்றத்திற்குள் புதிய வரலாற்றை, புதிய எழுச்சிகளை, புதிய வெளிச்சங்களை நாம் இனம் காண்கிறோம்.

வரலாற்றின் திருப்பங்களை மதிப்பிடுவதற்குக்கூட ஒரு பெருங்கவிஞன் அளவுகோல் ஆகிறான். டி.எஸ்.எலியட் கூறியதுபோல் ஒரு பெருங்கவிஞனின் தோற்றத்திற்குப்பிறகு பழைய கவிதைகள் புதிய வெளிச்சங்களைப் பெறுகின்றன. இனிப்பழங்கவிதையை, அந்தப் பழங்காலத்திற்குச் சென்று வாசிக்கக முடியாது. நமக்குள் வந்துவிட்ட புதிய பார்வைகள் வழியேதான் இனிப் பழங்கவிதைகள் புதிய பொருள்களை நமக்கு வழங்கும். இந்த வகையிலும் தமிழின் நெடுங்காலப் பாரம்பரியத்தைப் புரிந்து கொள்வதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் பெருங்கவிஞர் பாரதி நமக்கு ஓர் அளவுகோலாக வாய்க்கிறார்.

## 3. பாரதி நெறியில் வள்ளுவர், இளங்கோ, கம்பர்

தமிழிலக்கியத்தில் பாரதியின் இடம் என்ன என்று தீர்மானிப்பதன்மூலம் தான் தமிழிலக்கியப் பாரம்பரியம் பற்றி மதிப்பீடு செய்ய முடியும் என்று செல்லப்பா கூறியதை மேலும் இங்கு ஆராய்வோம். தமிழிலக்கிய மரபில் வள்ளுவரையும் இளங்கோவையும் கம்பனையும் பாரதி பலபடியாகப் போற்றினார் என்பதை நாம் அறிவோம்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்!
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்!
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை!
உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை"

என்று பாரதியார் பாடினார்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - நெஞ்சை
அள்ளும்சிலப்பதிகாரம் என்றோர் = மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு" என்றும்
"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும்

பாரதி இன்னொரு சமயத்தில் பாடினார்.

"விதியே விதியே தமிழச்சாதியை என்செய நினைந்தாய்" என்று தொடங்கும் இன்னொரு கவிதையில் கம்பனையும், வள்ளுவரையும் இளங்கோவையும் தோற்றுவித்தத் தமிழச்சாதி அமரத்துவம் உடையது என்று நம்பியிருந்தேன் என்று பாரதி பாடினார்.

(நம்பிக்கை என்ன ஆயிற்று என்பது பற்றிப் பாரதியின் வேதனையைப் பிறகு பார்ப்போம்)

இந்த மூவரைத்தவிர தமிழின் நெடுமரபில் வேறு யாரையும் பாரதி கொண்டாடவில்லை. பாரதி இவர்களிடம் தான் தன்னைக் கண்டார் என்று நாம் உறுதியாகக் கூறமுடியும். பாரதியை இவர்கள் எப்படி கவர்ந்தனர் என்பது குறித்துப் பாரதி சில குறிப்புக்களையே தன் கவிதைகளில் தந்திருக்கிறார். எனினும் பாரதி வழியே இந்த மூவரையும் நம்மால் பார்த்து மதிப்பிட இயலும். தமிழ்க்கவிதை வரலாற்றில் பாரதி ஒரு பெருங்கவிஞர். இவரைப் போலவே இவர் கொண்டாடிய வள்ளுவர் முதலிய மூவரும் பெருங்கவிஞர்கள்.

இருபதாம் நூற்றாண்டில் நமக்குக் கிடைத்த பாரதியின் வழியேதான் இவர்களை நாம் பார்க்கிறோம் மற்றும் இருபதாம் நூற்றாண்டில் பாரதி வழியே நமக்குள் வந்து சேர்ந்த, நாம் வரித்துக் கொண்ட பார்வையின் வழியேதான் வள்ளுவர் முதலியவர்களை நாம் பார்க்கிறோம்.

முதலில் இளங்கோவை எடுத்துக் கொள்வோம். இருபதாம் நூற்றாண்டில்தான் சிலப்பதிகாரம் நமக்கு வந்து சேர்ந்தது என்பது மட்டுமல்ல, நமக்குள் வந்து சேர்ந்தது என்று சொல்வதும் பொருந்தும். இடைக்காலத்தில் சைவம் மேலோங்கி இருந்தபொழுது இளங்கோ அடிகள் என்ற சமணர் படைத்த காவியத்தை நம்மவர் கண்டுகொள்ளவில்லை. அன்றியும் இருபதாம் நூற்றாண்டில்தான் மன்னராட்சி கேள்விக்குரியதாகிறது மற்றும் வீழ்த்தப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் தான் இலக்கியத்தில் மன்னர்கள், கடவுளர்கள் முதலியவர்களை ஓரத்திற்கு ஒதுக்கிவிட்டு இலக்கியத்தின் தலைமக்களாக மக்கள் வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டில்தான் புரட்சிக்கு வாய்ப்பு நேர்கிறது.

இவை மட்டுமல்லாமல் அரசனின் நீதிமுறை சிலப்பதிகாரத்தில் கேள்விக்குள்ளாகிறது. மதுராபுரி தெய்வம் நீதியை நிலைநிறுத்தவில்லை. மன்னனைக் காப்பாற்ற முடியவில்லை. சிலம்போடு புறப்பட்ட கண்ணகி உரத்துக்கேட்கிறாள். "நீதி தவறிய இந்த நகரத்தில் தெய்வம் இருகக் முடியுமா? சான்றோர் இருக்க முடியுமா? கற்புடைய மகளிர் வாழமுடியுமா" உண்மைதான். நீதி தவறி அநீதியே அறமாகிவிட்ட சமூகச் சூழலில் கோவில்களில் அடைபட்டு வழிபாடு பூசை முதலியவற்றை ஏற்றுக்கொண்டு

தெய்வங்கள் அடக்கமாய் இருந்து விடுகின்றன. தெய்வங்கள் புரோகிதர்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன.

பிணம் தின்னும் சாத்திரங்கள் என்பது போல சான்றோர்கள் தெருவுக்கு வருவதில்லை. மகளிர் தம் கற்பைக் காத்துக் கொள்ளமுடியவில்லை. கண்ணகியின் இந்த ஆவேசக் குரல் நம் காலத்தில் பொருள் நிறைவு பெறுகிறது.

தமிழ் உணர்வு இருபதாம் நூற்றாண்டில் தான் மேலோங்கி நிற்கிறது. வடநாடு நோக்கிச் சேரன் படையெடுக்கிறான். கனகவிசயர் தலையில் கல் ஏற்றி வருகிறான். வடவரின் ஆதிக்கம் கேள்விக்குறி ஆகிறது. அதைப்போல மறையவனின் அறிவுரை கேட்டுச் சேரன் கனகவிசயரிடம் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மன்னரிடம் பகைமை தீர்கிறான். தமிழ்நாடு ஒன்றாகிறது. இளங்கோ காணவிரும்பிய தமிழ் நாட்டைத்தான் இன்று நாம் காண விரும்புகிறோம். கண்ணகி கற்பின் கனலி மட்டுமல்ல, தெய்வமாகிறாள். தமிழ் மக்களின் நீதி உணர்வைக் கண்ணகி தன் நெஞ்சில் தாங்கி நிற்கிறாள். அறம் தவறிய நகரையும், ஊழல்களில் புதையுண்டவர்களையும் எரித்து அழிப்பது தேவை என்பதற்கு இன்றளவும் குறியீடாகிறாள். இவை எல்லாம் பாரதியிடம் நாம் காணும் அறம் முதலிய உணர்வுகளுக்கு சிலப்பதிகாரம் இடம் தருகிறது. பாரதி பாடிய பாஞ்சாலியின் இன்னொரு வடிவம் கண்ணகி. மத உணர்வுகளுக்கு இப்பொழுது நாம் அழுத்தம் தருவதில்லை. இளங்கோ சமணர் என்பதைக் காட்டிலும் அசலான தமிழர் என்பதற்கு நாம் அழுத்தம் கொடுக்கிறோம்.

சிலம்பின் காவியப்பரிமாணம் நம்மைப் பெரிதும் கவர்கிறது. மன்னர்கள் தரையில் வீழ்கிறார்கள். மனிதர்களுக்குள் தெய்வங்கள் கிளர்ந்தெழுகின்றன. பெண் தெய்வம் வரம் தருகிறாள். கோவலன் மட்டுமல்லாமல் பாண்டியனும் குற்றத்தில் இருந்து விடுபடுகின்றான். இந்தியா நம்முன் காட்சி தருகிறது. இமயம் நமக்கு எதிரில் வருகிறது. காவிரி கானல்வரியாய் ஓடுகிறது. இசைப் பாடல்கள் எல்லா நிலங்களிலும் எழுந்து ஒலிக்கின்றன. தமிழ்நாட்டிய அரங்கை நம் கண்முன் காண்கிறோம். மாதவியின் கானல்வரி கனகவிசயரின் தலையை நெரிக்கிறது. கண்ணகி நமக்குள் பெரும் காட்சியாகிறாள்.

நமக்குள் வரித்துக் கொண்ட பாரதியின் உணர்வுகள் வழியே சிலம்பை நாம் பார்த்ததுபோல் இப்பொழுது கம்பர் காவியத்தைையும் பார்த்துக் கொள்வோம்.

மனிதனை விட்டு விலகியிருக்கிற தெய்வங்கள் நமக்குத் தேவையில்லை. மனிதருக்குள்ளிருந்துதான் தெய்வங்கள் எழுச்சி கொள்கின்றன. மனித நீதியை இந்தத் தெய்வங்கள் நிறைவேற்ற வேண்டும். அரக்கர்கள் எல்லா இடங்களிலும் அன்றும் சரி, இன்றும் சரி ஆதிக்கம் பெறுகின்றனர். இவர்கள் எல்லாவற்றையும் வசப்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களுக்கு மனிதர்கள் மட்டுமல்லாமல், தெய்வங்களும் பணிபுரிய வேண்டும். இவர்கள் முன்னிலையில் பெண்கள் தன்மானத்தோடு இருக்கமுடியாது. இந்த அரக்கர்கள்தான் மன்னர்கள் மற்றும் தலைவர்கள், எந்த ஒரு மன்னனுக்குள்ளும் இப்படி ஒரு அரக்கன்தான் இருக்கமுடியும். இந்த மன்னனுக்கும் பதவி பறிபோய் மக்களுக்குள் ஒருவனாய் வந்து சேரவேண்டும். காடுமலைகளில் திரிய வேண்டும். மக்களின் துணை இல்லாமல் இவனுக்கு வாழ்வில்லை. ஏழைகளோடு இவன் தோழமை கொள்ள வேண்டும். நாகரிகத்தில் தாழ்ந்தவர் என்பதற்காக இவன் அவர்களை ஒதுக்க முடியாது. இவனுக்குள்ளும் இன்னும் தீமைகள் இருக்கின்றன. சிலசமயம் அவையும் வெளிப்படத்தான் செய்யும். இவனும் பெண்ணை ஒடுக்குவான் இருந்தபோதிலும், மக்களின் பேரன்போடு, வலிமையோடு, அரக்கர்களை இவன் முறியடிப்பான்.

இப்படி ஒரு கதையைத்தான் கம்பர் காவியமாய்ப் பாடுகிறார். இந்தக் காவியத்தில் பாரதி தன் மனத்தைப் பறிகொடுத்ததில் வியப்பில்லை. கம்பரின் கதை நம் காலத்துக் கதையும்தான். கம்பர் காவியத்தில் வரும் அற்புதங்கள் முதலியவற்றைப் பாரதியும் சுவைக்கத்தான் முடியும். புராணங்கள் கூறும் பொய்மைகள் கண்டு நகைத்தவன் பாரதி. புராணங்கள் வழியே மனிதக் கதையைப் பார்க்கச் சொன்னவன் பாரதி. ஜார் மன்னர்களை, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை வெறுத்தவன் பாரதி. இவர்களின் வீழ்ச்சியைப் பாரதி கொண்டாடுவதில் வியப்பில்லை. தெய்வ நம்பிக்கையோடுதான் பாரதி இறுதிவரை இருந்தார். ஆனால் பாரதியின் தெய்வத்திற்குள் நிறைவாக இருந்தவன் மனிதன்.

கம்பர் காவியத்தில் அரக்கர்களை ஒழிக்கும் பெரும் நோக்கத்தோடு தெய்வம் மனிதனாய் அவதாரம் செய்கிறது. கூனி, கைகேயி முதலியவர்கள் தெய்வத்தின் நோக்கம் நிறைவேறும் முறையில் ஒத்துழைக்கிறார்கள். இவர்கள் குற்றவாளிகள் ஆகமுடியாது. இராவணனேகூட இறுதியில் குற்றம் நீங்குகிறான். பகைவனுக்கருள்வாய் நெஞ்சே என்று பாடியவர் பாரதி. தின்னவரும் புலியிடத்தும் பகைமை பாராட்டாதவன் பாரதி. பாரதி கம்பர் காவியத்தைக் கூடுதலாகவே சுவைத்திருக்கமுடியும்.

"விதியே தமிழச் சாதியை" என்னும் கவிதையில் எல்லை ஒன்று இன்மை எனும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி என்று கூறுகிறார்.

இராவணன் வருகையைக் கண்ட விபீடணனோ வேறு இன்னொருவனோ கூறுவதுபோல இவன் "திருமால் இல்லை, சிவனும் இல்லை; பிரம்மனும் இல்லை. இவர்களை எல்லாம் கடந்து பரம்பொருளாய், மேலாய் இருப்பவன் இவன்" என்று ஒரு பாடல் வருகிறது. இது பரம்பொருள் இதற்கு உருவம் இல்லை. பெயர் இல்லை. நிறம் இல்லை. குணம் இல்லை என்பதாக நாம் எடுத்துக் கொள்ளலாம். இதற்கு எல்லை என்பது இல்லை. பிரபஞ்சமாய், இயற்கையாய், எல்லா உயிர்களுமாய், உயிரியக்கமாய் விரிந்திருப்பது இது. இதை எதற்குள் அடக்க முடியும். பிரபஞ்சத்தின் பேரியக்கம் என்று இதை நாம் இங்கு பொருள்படுத்த முடியும். எல்லையற்று விரிந்து செல்லும் பேரியக்கம் இது. இயற்கை, உயிர்கள் அனைத்திலும் இயங்குவது இந்தப் பேரியக்கம். இது மாபெரும் படைப்பியக்கம். எல்லா மனிதர்களுக்குள்ளும் இயங்குவது இந்தப் படைப்பியக்கம். இந்த மாபெரும் பேரியக்கத்தைத் தெய்வம் என்று சொல்வது ஒருவகையில் இந்த பேரியக்கத்தைக் குறுக்கி, குறைத்துச் சொல்வதாக முடியும். இந்தப் பேரியக்கம்தான் வரலாறு, நமக்குள்ளும் இயங்குகிறது. கம்பன் கதைக்குள் நாமும் இருக்கிறோம். மாபெரும் நாடகத்தில் நாமும் உறுப்பினர்கள். ஒருவகையில் கம்பன் இந்தப் பேரியக்கத்திற்கு வசப்பட்டிருக்கிறான். இதற்கு முன் இராமன் கதை ஒரு அற்பமான கதை.

சரயு நதியல் வீழ்ந்து இறந்த இராமனைப் பற்றிப் பாரதி பாடுகிறார். பாஞ்சாலியின் பார்வையில் தருமன் சிறியவனாகிறான்.

பாஞ்சாலி பெண்மையின் பேருருவம், சீதையின் பார்வையும் சிறுத்திருக்கவா முடியும். இவள் முன்னிலையில் இராமன் எளியவன். புதுமைப்பித்தனை இங்கு நாம் நினைத்துக் கொள்கிறோம்.

கம்பனின் கதை நம் காலத்துக்கதை. இருபதாம் நூற்றாண்டுப் பார்வையிலிருந்து கம்பரை நம் காலத்திற்குக் கொண்டு வருகிறோம். பாரதி வழியே, நமக்குள் செரித்துக்கொண்ட பார்வையின் வழியே, கம்பனை நாம் காண்கிறோம். கம்பனின் காவியப் பரிமாணங்கள் நமக்குத் தென்படுகின்றன. இடைக்காலத்தில் கம்பனை நாம் சற்று ஒதுக்கி வைத்திருந்தோம். இன்று கம்பனை நமக்கு நெருக்கமாகக் காணமுடியும். பாரதியின் வழியே இலக்கியத்தை நாம்

கற்றிருக்கிறோம். "கம்பன் என்றொரு மானிடன்" என்று பாரதி இன்னொரு இடத்தில் கூறுகிறார். கம்பனுக்குள் மானுடத்தை, மனித இயக்கத்தை, மனித நாடகத்தைக் காண்பதில் தவறில்லை.

இனி வள்ளுவருக்கு வருவோம். வள்ளுவர் இலக்கியத்தினுள்ளும் காவியப் பரிமாணங்கள் இயல்பாகப் பதிந்திருககின்றன. பண்புடையவர்கள் சிலர் என்றாலும் இவர்களால்தான் உலகம் அழிவுறாமல் வாழ்கிறது என்கிறார் வள்ளுவர்.

"ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்"

என்று சான்றோரைப் பற்றி வள்ளுவரின் சித்திரிப்புக்குள் ஒரு காவியத்தை நாம் காணமுடியும்.

செல்வம் ஒரு பக்கமாகவும் - அறிவும் பண்பும் இன்னொரு பக்கமாகவும் உலகம் இரண்டாக உடைந்து விட்டதைப் பார்க்கும் வள்ளுவர், இந்த உலகை எப்படிச் சரிப்படுத்துவது என்பதற்கு மருந்தாக ஒப்புரவை முன்வைக்கிறார். ஊருணியை, நடு ஊரில் பழுத்த மரத்தைச் சான்று காட்டுகிறார். எல்லாவற்றையும் பொதுஆக்கு என்கிறார். கொல்லப் பயன்படுவோர்கீழ் என்கிறார், தேவர்களைக் கயவர் என்கிறார்.

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அரசனின் செல்வத்தைத் தேய்க்கும் படை" என்கிறார். நெறியற்ற முறையில் வரி என்ற பெயரில் சுரண்டும் மன்னனை, பாலைநிலத்தில் கள்வனோடு ஒப்பிடுகிறார். குன்று போன்ற பெரியவனும் தவறு செய்யும்பொழுது குன்றி மணிபோலச் சிறுத்து விடுகிறான் என்கிறார். மேலுலகம் இல்லையென்றாலும் கொடு என்கிறார். உயிர்களைக் கொன்று உண்ணாதவன் தெய்வம் என்கிறார். வறுமையைப் படைத்தவன் தெய்வம் என்றால் அவனும் பிச்சையெடுத்து அலைந்து அழியட்டும் என்கிறார். பல்லக்கில் செல்பவனை முன் பிறப்பில் நல்வினை செய்தவன் என்றோ சுமந்து செல்பவனை முன்பிறவில் தீமை செய்தவன் என்றோ சொல்வது அறநெறி அல்ல என்கிறார். அன்பு செய்பவனுக்குத்தான் அறம் தெரியும். இவனுக்குத்தான் வீரம் உண்டு என்கிறார். அன்பில்லாதவனுக்கு அறம் தெரியாது என்பது மட்டுமல்ல, அவன் கோழை என்கிறார். மக்களை ஏமாற்றும் துறவிகளை வஞ்சகர்கள் என்கிறார். அவனுக்குள் இருககும் ஐம்பூதங்களும் நகைக்கும் என்கிறார். அன்போடு மனம் ஒன்றி

இல்லறத்தில் ஈடுபடுபவர் துய்க்கும் பேரின்பத்தைப்போல "தாமரைக் கண்ணான் உலகம் உண்டோ" என்கிறார். இன்னா செய்பவர்க்கும் இனியவை செய்ய வேண்டும் என்கிறார்.

இப்படி நூறு நூறு காட்சிகளை வள்ளுவர் தம் இலக்கியத்தில் பதிவு செய்கிறார். சிறியதைப்போலத் தோன்றும் எந்த ஒரு காட்சியையும் கவனத்தோடு நிறுத்திப் பார்க்க முடியுமானால் அதற்குள் காவியப் பரிமாணத்தின் காட்சிகளைக் காணமுடியும். வள்ளுவரின் மனிதனுக்குள் தெய்வங்களைக் காணமுடியும. சான்றோர்கள் தான் உலகைத் தாங்குகிறார்கள். பேரன்புதான் மனிதனை அமரனாக்குகின்றது. அறம்/அன்பில்லாத வாழ்க்கை வறண்ட பாலைநிலம். வானம் பெய்யவில்லை என்றால் உலகில் தானம்இல்லை, தவமும் இல்லை என்கிறார். மனிதனின் பெருமித வாழ்வுக்கு ஆதாரம் இயற்கை. உழவர்களே உலகத்திற்கு அச்சாணி. விதி வலியது என்றாலும், விதியை மனிதன் வெல்லமுடியும் என்கிறார். முயற்சி செய்பவனுக்கு முன்னர் தெய்வம் வேட்டியை இறுகக் கட்டிக்கொண்டு முன் செல்லும் என்கிறார். இப்படிச் செல்லுகின்றன - வள்ளுவரின் அறங்கள்.

திரும்பவும் சொல்லலாம். தமிழ் இலக்கியத்தில் பாரதி என்ற பெரும் கவிஞனுக்குள் திரண்டிருக்கும் இருபதாம் நூற்றாண்டின் பார்வை வழியே பார்க்கும்பொழுது வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும் நம் காலத்திற்கு நம் உணர்வுகளுக்கு நம் தேவைகக்கு மிக நெருக்கமாக வந்து விடுகிறார்கள். இவ்வகையில் வள்ளுவர் முதலியவர்களும் பெருங்கவிஞர்கள். தமிழின் அழிவின்மைக்கு இவர்கள் ஆதாரங்கள். தமிழ் வாழ்வை உலகில் நிலைநிறுத்தும் தகுதி இவர்களுக்கு உண்டு. இவர்களின் இலக்கியங்களில் காவியங்கள், பேரறங்கள், பெருங்காட்சிகள், மனித வீறு முதலியவை இயல்பாய்த் தென்படுகின்றன.

நெருக்கடி மிக்க வரலாற்றுச் சூழலில், வரலாற்றில் புதிய திருப்பங்கள் நேரும் சமயத்தில் பெருங்கவிஞர்கள் எழுவார்கள் என்ற நியதி உண்மை என்றால் வள்ளுவர் மற்றும் இளங்கோவின் தோற்றத்தையும் தமிழகச் சூழலில் வைத்து நாம் பார்க்க வேண்டும். சங்ககாலம் முடிவு வந்துவிட்டது. வேளிர்கள் இனக்குழுத் தலைவர்கள் இனி இல்லை. ஔவை புலம்பியதுபோல இனிப் பாடுநரும்இல்லை. பாடுநர்க்கு ஒன்று ஈபவரும்இல்லை. மூவேந்தர்களும் ஓயாமல் போரிட்டு நாடுகளை நாசமாக்கினர். நகரங்கள் அழிந்தன. வறுமை பெருகியது. அறங்கள் சிதைந்தன.

இந்தச் சூழலில்தான் சமூகம் திணறிக் கொண்டிருந்தபொழுது, வள்ளுவரும் இளங்கோவும் வருகின்றனர்.

அநேகமாக இவர்களின் காலம், களப்பிரர் காலம்என்று நம்மால் இனம் காணமுடியும். சமணர்கள் தமிழகத்தில் மக்களோடு கலந்தனர். கள்ளும், சூதும், பரத்தையர் ஒழுக்கமும் பரவியிருந்த சூழலை மாற்றுவதற்கு அறங்கள் உரைத்தனர். தமிழை அழிவிலி ருந்து காத்தனர். மதுரையில் பாண்டியன் இல்லை. அவன் அறநெறி அழித்தவன். புகார் நகரில் வறுமைக் கொடுமைகள் பெருகின. இளம் பெண்களைத்தேடி அலைந்த இளவரசன் கொல்லப்படுகிறான். பெண்கள் கற்போடு வாழ்வதற்கு உறுதியில்லை. தவமுயற்சிகள் பெருகுகின்றன. வாழ்வுக்கு ஆதாரமாக எந்தத் தத்துவம் இருக்கமுடியும் என்ற தேடல் ஏற்படுகிறது.

தெய்வங்கள் இனி தமிழகத்தில் தாராளமாக நடமாட முடியும். வாழ்வின் ஆதாரங்கள் அழிக்கப்படுகிற நிலையில் இனி மாயைகளும், பிரமைகளும் பெருக முடியும். விதியின் வளமை பெருகும். மேலுலகம் என்றும் கீழ் உலகம் என்றும் பேச்சுக்கள் எழும். இநதச் சூழலை இன்னும் உயிர்வாழ்கிற தமிழ்ச் சான்றோர் ஏற்கமுடியாது. இனக்குழுவின் கூறுகள் இன்னும் அழிந்துவிடவில்லை. சூழலை மாற்றியாக வேண்டும். மக்கள் வழிச்செல்லும் மன்னன் தேவை. புலன் அழுக்கற்ற துறவிகள் தேவை. மனித முயற்சிகள் பெருக வேண்டும். இத்தகைய உணர்வோடுதான் வள்ளுவரும், இளங்கோவும் தோன்றுகின்றனர். தமிழ்ச்சமூகம் இவர்களின் வழியே தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது.

கம்பரின் தோற்றத்தையும் இப்படிக் காணமுடியும். பெரும் வேந்தர்கள், மாபெரும் படையெடுப்புக்கள் தமிழகத்தில் நடைபெறுகின்றன. படையில் மக்கள் பெருந்திரளாய்த் திரட்டப்படுகின்றனர். என்னென்னவோ நடைபெறுகின்றன. அந்நியநாடுகள் அழிகின்றன. போர் வெற்றிகள் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் மக்கள் வாழ்க்கை என்ன ஆகும். பெரும் வெற்றிகளுக்காக நாட்டு மக்கள் எதை எல்லாம் இழக்க நேரிடும். உயிர்கள், உடைமைகள் - எவ்வளவு தான்இழப்பது. இலக்கியத்தில் சித்தரிக்கப்படுவதைப்போல மன்னர்கள் இருக்கமுடியாது. இவர்களுக்குள் இருப்பவர்கள் இராவணர்கள். இவர்களை ஒழித்தால் ஒழிய மக்களுக்கு வாழ்வில்லை. இனி இராமர்கள் தேவை. இப்படி ஒரு சூழலில் கம்பரின் தோற்றத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

இப்பகுதியை முடிக்கும்முன்னர் இன்னொன்றையும் சொல்லலாம். தமிழ் மரபில் கம்பன், கவிச்சக்கரவர்த்தி/பேரரசன். இந்தப் பெருமையை இன்றும் தனக்குத் தக்கவைத்துக் கொண்டவன் கம்பன். கவிப்பேரரசன் என்று தன் சமகாலத்தில் அழைக்கப்பட்ட ஒட்டக்கூத்தனை நாம் மறந்துவிட்டோம். கவித்துவம் கொழுத்த செயங்கொண்டாரையும் நாம் இன்று நினைப்பதில்லை. திருத்தக்கதேவர் முதலியவர்களும் இன்று நம் முன்னிலையில் இல்லை. இருபதாம் நூற்றாண்டில் இவர்களுக்கு உரிய இடம் என்ன என்பது கேள்விக்குரியதாகி விடுகிறது. சங்கப் புலவர்கள் நியாயமாகவே நம்முன் நிற்கிறார்கள். பாரதிதாசனும் நமக்குமுன் நிமிர்ந்து நிற்கிறார். சில பீடங்கள் சரிந்துவிட்டன. சிலர் மேல்நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

21-ம் நூற்றாண்டுக்குள் வந்துவிட்டாலும் நம் ஆளுமையை உருவாக்கிய இருபதாம் நூற்றாண்டு நமக்குள் இன்னும் வாழ்கிறது. தமிழின் நெடுங்கால மரபில் பெருங்கவிஞர்கள் என நமக்குக் கிடைத்தவர்களில் பாரதியோடு சேர்த்து நால்வர். வள்ளுவரு:க்கும், இளங்கோவுக்கும், கம்பருக்கும் நிகராய்ப் பாரதியை நாம் வைக்கமுடியும். வள்ளுவர் முதலியவர்களையும் பாரதிக்குள் வந்த இருபதாம் நூற்றாண்டுதான் நமக்கு இனம் காட்டியது. செல்லப்பா அவர்களின் கூற்றின் ஆழத்தை இங்கு நாம் புரிந்து கொள்கிறோம். செல்லப்பாவின் மேன்மையையும் ஒப்புக் கொள்கிறோம்.

## 4. "தமிழச் சாதியின் அமரத்துவம்?"

பாரதியின் தமிழ்ப்பற்று குறித்து நாம் விரிவாகச் சொல்லவேண்டியது இல்லை. தமிழச்சியைக் காட்டிலும், இன்னொரு பெண் அழகாக இருந்தால் தனக்குப் பொறுக்க முடியவில்லை என்று பாரதி எழுதினார். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழின் பெருமை சொன்ன பாரதி, உடனடியாகத் தமிழர்களின் தாழ்நிலை பற்றி வேதனையோடு சிந்திக்கிறார். தமிழர்கள் பாமரராய், விலங்குகளாய், அடிமைகளாய் பூமி எங்கிலும் பலரால் இகழப்பட்டு வாழ்வதைக் கண்டு குமுறுகிறார். தமிழ்மக்கள் நலம்பெற வேண்டுமானால் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டும் என்கிறார். வீதிதோறும் இரண்டொரு பள்ளி தேவை என்பதோடு இவை தமிழ்ப் பள்ளியாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் சொல்லுகிறார். தந்தையின் விருப்பத்திற்கு ஒப்ப ஆங்கிலக் கல்வி கற்கத் தனக்கு நேர்ந்த தீங்குகள் பற்றி எழுதுகிறார். பாரதியின் தமிழ்ப் பற்றை இன்றைய நிலையில் நினைத்துப் பார்க்கிறோம். பாரதி இறந்து 80 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் நம் அவல நிலையில் மாற்றம் இல்லை. அன்றியும் நம் அவலநிலை மேலும் பல மடங்கு அதிகரித்து உள்ளதைத்தான் இன்று நாம் பார்க்கிறோம்.

"விதியே விதியே தமிழச்சாதியை என்செய நினைந்தாய்?" என்று தொடங்கும் பாடல் குறித்து இப்பொழுது மீண்டும் சிந்திக்கலாம். தமிழச்சாதி அமரத்துவம் உடையது என்று கருதிய பாரதி இத்தகைய அழிவின்மைக்குக் காரணம் என்ன என்பது பற்றிச் சொல்லுகிறார். இங்குதான் பாரதியின் தமிழ் வரலாற்று அறிவின் மேன்மை என்ன? ஆற்றல் என்னவென்பது பற்றிய சிந்தனையை அறிந்து கொள்கிறோம். தமிழ் வரலாற்றை இப்படிப் பொருள்படுத்தியவர் இதுவரை யாரும் இல்லை.

தமிழ் நிலத்தில் வள்ளுவர் தோன்றினார். இளங்கோவும், கம்பரும் தோன்றினர். தமிழ் மக்களின் ஆற்றல் மிக்க பண்பாடுகளை

இவர்கள் தம் நூல்களில் பதிவு செய்துள்ளனர். தமிழனின் அறநெறி வள்ளுவத்தில் பதிவாகியுள்ளது. அநீதியை அழிக்க வேண்டிய ஆவேசம் சிலப்பதிகாரத்தில் பதிவாகியுள்ளது. இராவணர்களின் கொடுங்கோன்மையை மக்களைப் படைதிரட்டி அழித்தொழிக்க வேண்டும் என்ற அக்கறை கம்பர் காவியத்தில் பதிவாகியுள்ளது. இன்னும் நிறையச் சொல்லலாம். வள்ளுவரின் ஒப்புரவு, தமிழ் மக்களின் பேரறம் பெண் ஆற்றலைப் போற்றுவது இளங்கோவின் நெறி பற்றிப் படர்ந்துள்ள தீமைகளை வேரோடு களைவது தெய்வநெறி. இப்படித் தமிழ் நெறி பற்றி எவ்வளவோ சொல்லலாம்.

ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கு முந்தும் தெய்வ நெறியும் கொண்ட ஒரு சமூகம் வரலாற்றில் தன்னை உறதியாக நிலைநிறுத்திக் கொள்ளும். இவற்றைக் கைவிட்ட சமூகம் வரலாற்றில் மங்கி மாய்ந்து ஒழியும்.

விதியே விதியே எனத் தொடங்கும் இந்தப் பாடலில் வெளியிடப்பட்டதைப்போல பாரதியின் வேதனை வேறு எந்தப் பாடலிலும் இல்லை. "இதுநாள் வரை தமிழ்ச்சாதி அமரத்துவம் உடையது என்றுதான் நம்பியிருந்தேன் இப்பொழுது என் நம்பிக்கையின் மீது பேரிடி வந்து விழுந்துள்ளது" என்பதுபோலப் பாரதி கருதுகிறார். மேற்கிலிருந்து வருவன எல்லாவற்றையும் முழுமையாக ஏற்றுக்கொண்டால் ஒழியத் தமிழ்ச்சாதிக்கு உய்வு இல்லை என்கிறது ஒரு குரல். இதற்கு மாறாகப் பண்டையோர் கொண்ட கொள்கைகள் நடைமுறைகள் அனைத்தையும் முழுமையாகக் கடைப்பிடித்தால் ஒழிய தமிழச்சாதிக்கு உய்வு இல்லை என்கிறது இன்னொரு குரல். இந்த இரண்டு குரல்களுக்கும் இடையில் அகப்பட்டுத் தவிக்கிறது தமிழ்ச்சாதி.

பாரதியின் கருத்து என்ன? மேற்கிலிருந்து வருவனவற்றில் நம்மால் ஏற்கத்தக்கவைகளை ஏற்பதும், பழமையிலிருந்து வருவனவற்றில் தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளுவதும், இப்படி இரண்டு போக்குகளுக்கு இடையில் நம் வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்வதும் தமிழ்மக்களின் கடமை என்கிறார் பாரதி. மேலும் தொடர்கிற கவிதை இத்துடன் நின்று விடுகிறது. பாரதி கருதியதுபோல ஒரு நிலைமை அவர் காலத்திலும் இருந்தது இன்றைக்கும் இதே சிக்கல். தமிழ்ச்சாதி வரலாற்றில் எப்படித் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

தமிழ் வரலாற்றில் ஒரு இறுதிக்கட்டத்தில் நாம்இருப்பதைப் போன்ற உணர்வுதான் நமக்கு ஏற்படுகிறது. இன்றுத் தமிழுக்கு

இடமில்லை. தமிழ் மக்களின் வாழ்வுக்கான ஆதாரங்கள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன. தமிழ் நிலமும், நீரும், கடலும் நஞ்சாகின்றன. உலகமயமாதல் முதலிய பெயர்களில் அந்நியர்கள் நம் அரசியலிலும், பொருளியலிலும், கல்வி, மருத்துவம், பண்பாடு முதலியவற்றிலும் ஊடுருவி அழித்து வருகின்றனர். இவர்களோடு நம் அரசியல்வாதிகளும், படிப்பாளிகளும் ஒத்துழைக்கின்றனர். பணத்துக்கும் அதிகாரத்திற்கும் நாம் பலியாகி வருகிறோம். வாழ்க்கை நம் வசமில்லை. நம்மிடமிருந்து தேசத்தைப் பறித்துக் கொண்டவர்கள் நம்மைக் கூலிகளாய், அடிமைகளாய், அகதிகளாய் மாற்றி வருகிறார்கள். மதுபானம் முதலியவற்றிற்கு இடம் கொடுத்துத் தமிழ் மக்களின் அற உணர்வும், மனஉறுதியும் சிதைந்துவிட்டன.

தமிழன் இப்பொழுது கோழையாய், போக்கிரியாய் அலைகிறான். துதிபாடிகள் பெருகிவிட்டனர். தமிழனுக்குத் தன்மானம் இல்லை, பகுத்தறிவில்லை. பெரியருக்கு மட்டுமல்லாமல் மார்க்சுக்கும் புரோகிதர்கள் வந்துவிட்டனர். தமிழனை ஒடுக்க எதிரிகள் படை திரட்டுகின்றனர். அறிவியலும் தொழில்நுட்பமும் தமிழனை அடிமைப்படுத்துகின்றன. தமிழ் மக்களைக் கொள்ளையிட்டவர்கள் நன்றாக வாழ்கின்றனர். தமிழன் வறியவனாய், நோயாளியாய் வாழ்வுக்குத் தவிக்கிறான். இந்த நிலை மாறும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. தமிழனை வாழவைக்க முந்தும் சாதிகள் தொடர்ந்து ஒடுக்கப்படுகின்றன.

பாரதியின் வேதனைக்குரல் நமக்குள்ளும் ஓங்கி ஒலிக்கிறது. தமிழன் அமரத்துவம் உடையவன்தானா? வள்ளுவரையும், இளங்கோவையும், கம்பரையும் நாம் என்ன செய்தோம். வள்ளுவரின் அறத்தை நாம் எப்படிக் கைவிட்டோம். ஒப்புரவை ஏன் தவறவிட்டோம். இளங்கோவின் புரட்சிகர உணர்வு நமக்குள் எப்படி அழிந்தது. இராவணர்களை எப்படிச் சகித்துக் கொள்கிறோம். தெய்வம் என்று எதை நாம் கொண்டாடுகிறோம். தமிழ்நெறி என்ன ஆயிற்று. கூலிகளாய், அடிமைகளாய், அகதிகளாய், கோழைகளாய், வெறியர்களாய், வேசிகளாய் வாழ நேர்ந்த நிலையில் வறுமைக்கும், நோய் நொடிகளுக்கும் பலியான நிலையில் நமக்கு யார் துணை. நம்மை யார் காப்பாற்ற முடியும். வள்ளுவரும் இளங்கோவும் நமக்குள்வந்து தங்க நமக்குள் எங்கே இடம் இருக்கிறது. பணத்திற்கும் அதிகாரத்திற்கும் எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்த நிலையில் வள்ளுவரும் இளங்கோவும் நமக்கு எதற்குத் தேவை.

பக்திப் பரவசத்தில் மட்டும் தம்மை மூழ்கடித்துக் கொள்பவர்கள் தமக்குள்ளும் வெளியிலும் எந்த இராவணனைக் காண்பார்கள். இராவணர்களோடு சமரசம் செய்து கொண்டவர்களுக்கு இராமனும்தான் எதற்குத் தேவை. இந்த வேதனையிலிருந்து விடுதலை பெற நமக்கு என்னவழி?

# 5. புதிய பாரதி தேவை

ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கு முன்பு கோவையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் பார்வையாளர் ஒருவரின் கேள்விக்கு கீழ்க்கண்டவாறு கவிஞர் அப்துல் ரகுமான் மறுமொழி கூறினார்.

"தமிழில் இன்று பெரும் கவிஞர்களின் தோற்றத்திற்கு வாய்ப்பில்லை. பாரதியார் காலத்தில் அவருக்குப் பின்னணியாக தேச விடுதலை இயக்கம் இருந்தது. பாரதிதாசன் காலத்தில் அவருக்குப் பின்னணியாகத் திராவிடர் இயக்கம் இருந்தது. இன்று பேரியக்கங்கள் இல்லை. ஆகவே பெருங்கவிஞர்களின் தோற்றத்திற்கு வாய்ப்பு இலலை.

கவிஞர் அப்துல் ரகுமானின் மறுமொழி அன்றும் எனக்கு உடன்பாடில்லை. இன்றும் எனக்கு உடன்பாடில்லை. இடைக்காலத்தில் அப்துல் ரகுமானின் கருத்து மாறி இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. காரணம் பத்தாண்டுகளுக்கு முன்பே உலகளாவிய நெருக்கடிகள், கெடுபிடிகள் முதலியவை வளர்ந்திருந்தன. இந்நிலை மேலும் வெடித்திருக்கிறதே தவிர ஒழிந்தபாடில்லை. இந்தியாவினுள்ளும் அன்றும் சரி, இன்றும் சரி நெருக்கடிகள் கூடியுள்ளன. தமிழகத்திலும் எதுவும் குறைந்தபாடில்லை. எல்லா அநீதிகளும் நாசங்களும் உச்சஅளவில் நடைபெறுகின்றன.

வரலாற்றை ஒழிக்கும் சக்திகள் வலிமை பெற்று வருகிறார்கள். தமிழ் வாழ்வையும் இறுதியில் தங்களையும் இவர்கள் சேர்த்து அழித்துக் கொள்வார்கள். இன்று உலகளவில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு குடும்பத்தினுள்ளும், ஒவ்வொரு நிறுவனத்தினுள்ளும், ஒவ்வொருவர் மனத்தின் உள்ளும் ஓர் போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் எந்தக் காரணத்திற்காகவும் நம் ஆளுமையை, நம் வாழ்வை, நம் வரலாற்றை விட்டுத்தர முடியாது. எதிரிகள்

வலிமை மிக்கவர்கள். எதிரிகளின் தாக்குதலால் இடைக்காலத்தில் நாம் வலிமை அற்றுப்போனோம் என்பது உண்மைதான். எனினும் நமக்குள் ஆற்றல்கள் இருக்கின்றன. வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், சித்தர்களும், பாரதியும், பாரதிதாசனும் இன்றும் நமக்குள் வாழ்கிறார்கள். நமக்குள் இருந்து நம் ஆற்றல்களைத் திரட்டிக் கொள்ள முடியும். வள்ளுவருக்கு மட்டுமல்லாமல் பாரதிக்கும் நமக்குள் உயிர்தர முடியும்.

பேரியக்கங்கள், நம் கண்ணுக்குத் தெரிகிறமாதிரி இன்னும் உருவாகவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில விடுதலை இயக்கங்கள், உரிமை இயக்கங்கள், பசுமை இயக்கங்கள் உருவாகிவருகின்றன. பெரியாரையும், மார்க்சையும் நாம் இழந்துவிடவில்லை.

ஒரு பெருங்கவிஞரின் தோற்றத்திறக்ான காரணிகள் கூடிவருகின்றன. ஆனால் நம் கவிஞர்கள் தான் காலத்தைப் புரிந்து கொண்டவர்களாக இல்லை. தமிழ் வாழ்வின் நெருக்கடிகள் என்று தொடங்கின? யாரால் ஏற்பட்டன? எத்தனை வகைகளில் ஏற்பட்டன? என்றெல்லாம் வரலாறு மற்றும் பொருளியல் முதலியவற்றுக்குள் நுழைந்து ஆராயும் திறன் நமக்கு இல்லை. நம்மவர்களுக்கு இல்லை. நமக்குள் எற்பட்ட சிதைவுகள், சீரழிவுகள், காயங்கள், ஓலங்கள், துடிப்புக்கள், வேதனைகள் என்று எவற்றை நாம் உணர்ந்தோம்? எல்லாவற்றையும் மறைந்து மூடுவதில் நமக்குத்தான் எவ்வளவு திறமை! எத்தனை போலித்தனங்கள்! எத்தனை பொய்ம்மைகள் மற்றம் பிரமைகள்! எல்லாவற்றையும் கிழித்துக் கொண்டு நம்மை எப்போது பார்க்கப் போகிறோம்? நம்மை இன்றும் ஆதிக்கம் செய்பவர் யார்? எதற்காக இவர்களிடம் நம்மை நாம் இழந்தோம்? இவர்களிடம் பரிசுகளையும், பாராட்டுக்களையும் யாசித்து நிற்கிற அளவுக்கு நாம் எப்படிக் கோழைகளானோம்.

இப்படி எல்லாம் நம் வாழ்வை, வரலாற்றை, நம் சூழலை புரட்டிப் பார்க்கிற பார்வையும், துணிவும் நமக்குத் தேவை. வரலாற்றில் இன்னொரு திருப்பத்திற்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்டது இந்தத் திருப்பம். இருபத்தோராம் நூற்றாண்டில் இதன் தாக்கங்கள் நூறு மடங்காய்ப் பெருகி உள்ளன.

எதிரிகளின் தாக்குதல் தொடர்ந்து அதிகரிக்கும்போது நம்மை நாமே விட்டுத்தர முடியாது. இயக்கங்கள் ஒன்றிணையும் பேரியக்கம்

உருவாகும். வாழ்வா? சாவா? என்று முடிவு செய்யும் கட்டத்தில் நாம் இருக்கிறோம். இப்படி ஒரு பேரியக்கம் பெருங்கவிஞரை எதிர்பார்த்து நிற்கிறது. தமிழ்க் கவிஞர்களில் யார் இனி பெருங்கவிஞராய் உருவாக முடியும் என்ற கேள்வியை வரலாற்றுக்கு விட்டுவிடுவோம். பாரதி இந்திய மக்களுக்கு எதிர்பார்த்த விடுதலையை இடையில் எவரெவரோ பறித்துக் கொண்டனர். இந்திய மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான தொழில் முயற்சிகளை பாரதி எதிர்பார்த்தார். ஆனால் மக்களையும் இயற்கை ஆதாரங்களையும், தேசநலன்களையும் அழிக்கிற முறையில்தான் அந்நியர்களின் ஊடுருவலோடு நம் தேச முதலாளிகள் செயல்படுகின்றனர். பாரதி எதிர்பார்த்ததற்கு மாறாய்ச் சாதிச் சண்டைகளும், மதச்சண்டைகளும் பெருகிவிட்டன. போலி மதவாதிகள் தொடர்ந்து உற்பத்தியாகின்றனர். பெண் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இயலவில்லை. தேசத்தை அடமானம் வைப்பதில் நம் தலைவர்கள் முந்துகின்றனர். இன்னொரு விடுதலைப் போராட்டம் இன்று தேவைப்படுகிறது. பாரதியும் தேவைப்படுகிறார்.

பாரதி நமக்குள் மீண்டும் மீண்டும் எழுவார்.

"என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று தணியும் இந்த அடிமையின் மோகம்"

என்ற பாரதியின் வரிகள் நமக்குள் நாள்தோறும் ஒலிக்கின்றன.

"இனி ஒரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்ற பாரதியின் குரல் நமக்குள் மங்கிவிடாது.

அடிமைப்பட்ட பாஞ்சாலியின் ஆவேசம் நமக்குள்ளும் எழுகிறது. இந்தக் குரல் கண்ணகியின் ஆவேசத்தோடு இணைகிறது.

"இது பொறுப்பதற்கு இல்லை - தம்பி
எரிதழல் கொண்டு வா"

என்று உறவு என்று பாராமல், தன்னை அடிமைப்படுத்தியவனுக்கு எதிராக வீமனின் குரல் இன்றும் நமக்குள் ஒலிக்கிறது,

பாரதியை நாம் இழப்பதற்கில்லை. புதிய பாரதிகள் நமக்குத் தேவை. புதிய காலச் சூழலை எதிர்கொள்ளும் முறையில் புதிய பாரதிகள் தேவை. முன்னைய பாரதியின் உயிர்ச்சக்தி புதிய பாரதிகளைத் தோற்றுவிக்கும். இவர்கள் வழியே வள்ளுவரும், இளங்கோவும் மீண்டும் உயிர்த்தெழுவார்கள்.

## கண்ணன் பாட்டில் பாரதியின் கவித்துவம்

தமிழ்க் கவிதையின் உச்சங்களில் ஒன்று என பாரதியின் கண்ணன் பாட்டை நாம் சொல்லமுடியும். கண்ணன் பாட்டில் பாரதி செய்திருக்கிற புதுமைகள் வியக்கத்தக்கவை. கண்ணன் என்ற படிமம், இந்தியாவின் படைப்பியக்கத்தில் ஒரு அற்புதம் என்று சொல்லமுடியும்.

பக்தி இயக்கத்தைப் பொறுத்தவரை தமிழ் மரபின் மாபெரும் ஆக்கக் கூறுகளில் ஒன்று, வைணவம். இவை ஆரியமும் தமிழும் தமக்குள் கொண்ட இணைப்பில் ஓர் ஆக்கமென கண்ணனைக் குறிப்பிடமுடியும். கண்ணன் என்ற படிமம் பன்முகப் பரிமாணங்கள் கொண்டது. மகாபாரதம், பாகவதம் மட்டுமல்லாமல், திவ்வியப்பிரபந்தமும் கண்ணனின் பன்முகப் பரிமாணங்களுக்கு ஆக்கம் தந்திருக்கிறது. இவற்றோடு தோய்ந்தவர் பாரதியார். அன்றியும் தன் சம காலத்தையும் உள்வாங்கிக் கொண்ட நிலையில் கண்ணனை நமக்கு மிக நெருக்கமாகக் கொண்டுவந்திருக்கிறார்.

கண்ணனைக் குழந்தையாகவும், ஆயர்குலப் பெண்கள் மத்தியில் காதலனாகவும், அர்ச்சுனனக்குத் தோழனாகவும், போர்க்கலையில் சிறந்தவனாகவும், தத்துவம் அறிந்தவனாகவும் நாம் அறிந்திருக்கிறோம்.

ஆனால் பாரதி மேலும் சில பரிமாணங்களைக் கண்ணனுக்குள் காணுகிறார். துவாரகையில் அரசனாக வீற்றிருந்த கண்ணனை நாம் அறிவோம். கம்சன் முதலியவர்களைக் கொன்றவனையும் நாம் அறிவோம். பாகவதக் கதைகளில் மேலும் சில பரிமாணங்களை அறிந்திருக்கிறோம். பாரதியைப் பொறுத்தவரை கண்ணன் தனக்குத் தோழன், தனக்குச் சேவகன் மற்றும் சீடன், கண்ணன் தனக்குத் தாய் மற்றும் தந்தை, கண்ணன் தன் குழந்தை, கண்ணன் தனக்கு காதலி மறறும் காதலன், கண்ணன் தன் குலதெய்வம் என்று பலபடியாகப் பேசுகிறார்.

கண்ணன் பாட்டு காவியப் பரிமாணத்தையும் தனக்குள் கொண்டிருக்கிறது. பாரதியை ஆழ்வார்கள் வரிசையில் நம் காலத்தவராக நம்மால் இனம் காணவும் முடியும். வ.வே.சு. அவர்கள் எச்சரித்தபடி வாள்மீது நடக்கும் சாதுரியம் பாரதியிடம் இருக்கத்தான் செய்கிறது. பாரதி அங்கங்கே மரபின் எல்லைகளை எளிதாகக் கடக்கவும் செய்கிறார். காதலன் காதலிக்கும் இடையில் சாத்திரங்களுக்கு என்ன வேலை என்று கேட்கிறார். வேதங்கள், புராணங்கள் முதலியவற்றை மூடக்கற்பனைகள் என்று சொல்வதில் பாரதிக்குத் தயக்கம் இல்லை. பாரதியின் பராசக்தி, அண்டகோளங்களையெல்லாம் தன் கைகளில் பொம்மைகளாக்கி தன் குழந்தைகளை மகிழ்விக்கிறாள்.

கண்ணன் சேவகனாக வந்து பாரதிக்குப் பணிவிடை புரிகிறான். சேவகர்கள் சொல்லும் பொய்களை பாரதி இரசிக்கிறார். சேவகனுக்குள்ளும், தன் சீடனுக்குள்ளும் பாரதி கண்ணன் என்ற தெய்வத்தைக் காண முடிகிறது. கண்ணன் பாரதிக்கு மிகவும் நெருக்கமானவன். தேவைப்படும்பொழுதெல்லாம் பாரதியை சாடக்கூடியவன் இந்தத் தோழன்.

கண்ணன் பாட்டில் உள்ள ஒவ்வொரு கவிதையிலும் பாரதியின் முத்திரையை நாம் கண்டு வியக்கிறோம். நம் மரபுச் செல்வங்களுள் கண்ணனுக்கு நிகரான இன்னொரு காட்சியை நாம் நினைப்பதற்கில்லை. வாழ்வியலின் அத்தனை கோலங்களையும் கொண்டவனாக இந்திய மரபு நம்க்குக் கண்ணனை முன்வைத்திருக்கிறது. என்னதான் முயற்சி செய்தாலும், கண்ணனை இந்துத்துவத்திற்குள் இணைப்பது கடினம். பகவத் கீதை மட்டுமே கண்ணன் அருளிய தத்துவம் என்று நாம் மருள வேண்டியதில்லை. கண்ணன் பாட்டைப் பகவத் கீதைக்கு ஓர் ஆற்றல் மிக்க மறுதலையாகவும் நாம் காண்முடியும்.

கண்ணதாசன் கண்ணனைக் கொண்டாடியதில் மரபின் தொடர்ச்சியைக் காணுகிறோம். பகுத்தறிவு மரபு நம் தடங்களை மாற்றியது. மறைத்தது என்பது குறித்தும் நாம் இப்பொழுது சிந்திக்க வேண்டும். கண்ணனைக் குறித்து ஓஷோவின் விளக்கங்கள் நாம் அறிதற்குரியவை.

கண்ணன் பாட்டின் கவித்துவம் குறித்து நாம் இப்பொழுது சில சொல்லமுடியும். பாரதிக்குத் தன் காலத்தில் கண்ணன் ஏன் தேவைப்பட்டான். மரபு வழி வந்த கண்ணனைப் பாரதி தனக்கொத்த முறையில் எவ்வாறு ஏன் படைத்தான். இப்படி எல்லாம் சில

கேள்விகள் நமக்குள் எழுகின்றன. தெய்வங்களைத் தொலைதூரத்தில் நாம் வைக்கவேண்டியதில்லை. தெய்வங்களுக்குள்ளும் மனிதனை, மனித வாழ்வின் அர்த்தங்களை நாம் கண்டு தொகுக்க முடியும். நமக்குள்ளிருந்து தெய்வங்கள் பிறப்பெடுக்கின்றன.

நம் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களைத் தெய்வங்களுக்கும் தந்திருக்கிறோம். நமக்குள்ளும் படைப்பியக்கம் உண்டு. இந்தப் படைப்பியக்கம் தான் உலகத்தை இயற்கையை, பிரபஞ்சத்தை நமக்குத் தேவையான அர்த்தங்களோடு படைக்கிறது. இப்படித்தான் நமக்கான வாழ்க்கையை அர்த்தப்படுத்துகிறோம்.

வாழ்வுக்கு அர்த்தங்கள் இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். நாம் படைத்துக் கொண்ட வாழ்வின் அர்த்தங்கள் கற்பனையாகக்கூட இருக்கலாம். எனினும் வாழ்வுக்கு அர்த்தங்கள் நமக்குத் தேவை. இந்த அர்த்தங்கள் என்பவை மண்ணைப் புரட்டி நிலத்தை பக்குவப்படுத்துகிற கருவிகள் மாதிரி. இக்கருவிகள் இல்லாமல் வாழ்க்கையை நம்மால் புரிந்து கொள்ளவும் இயலாது.

நமக்கு உறவுகள் தேவை. தாயும் தந்தையும் நமக்கு நெருக்கமானவர்கள். காதலி, குழந்தைகள் நமக்கு இனியவர்கள். குருவுக்கு நம் வாழ்வில் என்றும் முக்கிய இடம் உண்டு. தோழன் இல்லாமல் முடியாது. சேவகனும், சீடனும் கூட நமக்கு இன்றியமையாதவர்கள். இதற்கப்பால் அரசன் அல்லது அரசு, அப்புறம் தெய்வம்.

இப்படி ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பல்வேறு உறவுகள். இந்த மனிதனே கூடத் தானே தந்தையாகவும், குருவாகவும், நிர்வாகியாகவும், தோழனாகவும், சீடனாகவும், தனக்குள் பல்வேறு பாத்திரங்களைச் சமூகம் மற்றும் குடும்பச் சூழலில் தரிப்பவனாகவும் இரு:ககிறான்.

என்னதான் உறவுகளுக்கு இடையில் வேறுபாடுகளும் முரண்பாடுகள் இருந்தபோதிலும் இவற்றுக்கிடையிலான ஒத்திசைவில்தான் மனிதன் வாழமுடியும். எந்த ஒரு குருவுக்கும் சீடனும் கற்பிக்க முடியும். எந்த ஒரு தலைவனையும் சேவகனும் ஏவல் செய்ய முடியும். அரசனைப் போலவே நாமும் பலரைக் காப்பாற்றுகிறோம். நிர்வாகம் செய்கிறோம். குழந்தையும்கூட நம்மைப் படைப்பதில் பங்கு வகிக்கிறது. யாரும் நமக்குத் தாழ்ந்தவர்களும் இல்லை, உயர்ந்தவர்களும் என்றும் இல்லை. அன்பின் வசப்படலில் நமக்குள் சமத்துவம் விளைசிறது.

இன்றைய வாழ்வில் வருணாசிரம வேறுபாடுகளுக்கு அர்த்தம் இல்லை. ஏற்றத்தாழ்வுகளும் அர்த்தம் இழந்து வருகின்றன. ஆதிக்கங்கள் இவற்றை விட்டுவிடாமல் இருக்கலாம். ஆனால் எந்த ஒரு ஆதிக்கமும் தனக்குள் முரண்பட்டும், தனக்குள்ளும் சிதைத்து கொண்டேதான் இருக்கிறது.

இப்படியெல்லாம் நம் காலத்தை ஒட்டி நாம் சிந்திக்கிறோம். 20-ம் நூற்றாண்டுச் சூழலுக்குள் இவ்வகைச் சிந்தனைகள் இயல்பாகவே வந்து சேர்கின்றன. இந்த நிலையில்தான சமத்துவம் என்ற பண்பாட்டை மேற்கொள்கிற மனிதனாக நாம் இருக்க / இயங்க விரும்புகிறோம். உறவின் பல்வேறு வகைகளுக்குள்ளும் ஏதோ ஒரு வகையில் சமத்துவம் நமக்குத் தேவை. என் உடைமைகளை நான் விட்டுக் கொடுக்க முடியவில்லை என்றாலும் எனக்குப் பணி செய்பவரோடு சிலவற்றையேனும் என்னால் பகிர்ந்து கொள்ள முடியும். நான் ஓர் ஆசிரியனாக இருக்கும்பொழுதே என்னை என் மாணவர்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இப்பொழுதெல்லாம் நிர்வாகம் என்பது ஏவல் செய்வதன்மூலம் சிறப்புறுவதில்லை. ஏவல் செய்வதன் மூலம் நிர்வாகம் சீர்கெடும். இங்கும் தோழமை தேவைப்படுகிறது. இங்கும் பகிர்ந்து கொள்ளமுடியும். நம் காலத்தின் குரல் சமத்துவம். ஏற்றத்தாழ்வுகளுக்கு, ஆதிக்கங்களுக்கு எதிரான ஆற்றல் மிக்க குரல் சமத்துவம். சமத்துவத்தின் விரிவில் சமதர்மம் இயல்பாகவே மலர்ச்சி பெறும். பாரதிக்குள் இந்தப் பண்புகள் மேலோங்கி இருந்தன.

பாரதியின் படைப்புக்கள் அனைத்தும் முந்திய சமூகச் சூழலுக்கு எதிரானவை என்பதில் ஐயமில்லை. பழஞ் சமூகத்திற்கு தீவிரமான எதிர்நிலை எடுத்தவர் பாரதியார். பழஞ்சமூகத்தின் ஆக்கக் கூறுகளை பாரதியார் தனக்குள் இணைத்துக் கொள்ளவும் செய்தார். பாரதியின் தேசியப் பாடல்கள் முதலியவை பற்றி எல்லாம் இங்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. அடிமைத்தனத்தை எந்தவகையிலும் பாரதி ஏற்கவில்லை. விடுதலை உணர்வின் மொத்த வெளிப்பாடாக, பாரதி விளங்கினார்.

சமத்துவமும் சமதர்மமும் பாரதியைப் படைத்தன. இருபதாம் நூற்றாண்டின் பேரெழுச்சியைப் பாரதி தனக்குள் கொண்டிருந்தார். கண்ணன் பாட்டினுள்ளும் இந்தப் பேரெழுச்சியின் பன்முகப் பரிமாணங்களை நாம் காண முடியும். இந்தக் கூறுதான் கண்ணன் பாட்டையும் நமக்குள் கொண்டு வருகிறது. கண்ணன் பாட்டிற்குள் வைத்து நம்மையும் பார்த்துக் கொள்ள முடியும்.

சேவகனோடும், சீடனோடும் நம் உறவுகள் எத்தகையவை என்று நாம் சிந்திக்க முடியும்.

இந்திய மரபினுள் மாபெரும் ஆக்கக் கூறாக விளங்கிய கண்ணன் என்ற படிமத்தினுள் கவித்துவ வீச்சின் பன்முகப் பரிமாணங்களை நாம் காண்கிறோம். கண்ணனைத் தன் மரபுக்குள் கண்டு அவனை மீண்டும் மீண்டும் காலத்திற்கு ஒத்தபடி புதுப்பித்துக் கொள்வதிலும் கவித்துவத்தின் வளத்தை நாம் காண்கிறோம்.

கண்ணன் நமக்கு வெளியில் இல்லை. வெளியில் அவனை வைத்திருக்கும் வரை நமக்கு அவன் அந்நியன். அவனை நாம் நமக்குள் வைத்துப் பார்க்க முடியும்.

இப்பொழுது கண்ணனுக்குள்ளும் நாம் இருக்கிறோம். கண்ணனைப் பேலவே நாமும் விளையாடுகிறோம், காதலிக்கிறோம், கற்றுக் கொள்கிறோம், கற்பிக்கிறோம், சேவை செய்கிறோம், ஏவல் செய்கிறோம், பகிர்ந்து கொள்கிறோம், கொண்டாடுகிறோம், கூத்தாடுகிறோம், நிர்வாகம் செய்கிறோம், நிர்வாகத்திற்குட்படுகிறோம். இவை இல்லாமல் நமக்குள்ளும் இயக்கம் இல்லை, சமூகம் இல்லை, உறவு இல்லை, சமத்துவம் நமக்கு உயிர். சமதர்மம் இல்லாமல் நமக்கு வாழ்வில்லை.

தெய்வங்களை நாம் புரிந்து கொள்கிறோம். தெய்வங்களும் நமக்கு அந்நியமில்லை. புராணங்கள் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. புதிய வேதங்களை நாமும் படைக்கிறோம். நமக்குள் ஒரு பெரும் நாடகம் மாறி மாறி நாடகத்தில் நாம் பங்கு கொள்கிறோம். உலகம் ஒரு பெரும் நாடகம். மாபெரும் விளையாட்டு. கவித்துவம் நமக்குள் விளைகிறது. கண்ணன் பாட்டை நாம் கொண்டாடுகிறோம்.

## பாரதியும் - பார்ப்பனியமும்

பாரதியிடம் பார்ப்பனியம் கண்டு அண்மைக்காலத்தில் திராவிட இயக்கத்தவர் பாரதியைக் கடுமையாகச் சாடுகின்றனர். இந்துத்துவவாதிகள் பாரதியைக் கவர்ந்து கொள்வதற்கான முயற்சிகள் ஒரு பக்கம் நடைபெறும்போது, இவர்களின் சாடல்கள் பாரதியை இந்துத்துவவாதிகளிடம் சேர்ப்பதாக இருக்கின்றன. இது பாரதிக்குச் செய்யும் பெரும் தீங்கு என்பதில் ஐயமில்லை. விடுதலை இயக்கத்தோடு திராவிட இயக்கத்தவர் முரண்பட்டு நின்றனர். இந்தியாவின் ஒருமைப்பாட்டைப் பாரதி பெரிதும் வற்புறுத்தினார். பாரதியிடம் இறுதிவரை தெய்வ நம்பிக்கை இருந்தது. குறிப்பாகப் பாரதியின் அத்வைத நிலைப்பாடு இவர்களுக்கு வெறுப்பைத் தந்தது. பாரதி பிறப்பில் பார்ப்பனர். இந்தியாவை ஆரிய தேசம் என்று பலமுறை பாரதி பாடியிருக்கிறார். இவ்வகைக் காரணங்கள் திராவிட இயக்கத்தவர் பாரதியை வெறுப்பதற்கான காரணங்கள். இவை குறித்து இங்குச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

பாரதி ஒரு சமயம் அத்வைத நிலைப்பாட்டில் ஆழ்ந்து இருந்தபோதிலும், விநாயகர் முதலிய பல தெய்வங்களையும் அவர் பாடுகிறார். தேசம் அவருக்குப் புதிய தெய்வம். சக்தி அவருக்கு இன்னொரு தெய்வம். சாக்தம் கூறும் வழிபாட்டை ஒருசமயம் பாரதியும் மேற்கொண்டிருந்தார். ஆனால் பாரதியின் சக்தி பன்முகப் பரிமாணங்கள் கொண்டது. நவீன அறிவியல் இயற்கையிலிருந்து மின்சக்தி முதற்கொண்டு எத்தனையோ சக்திகளை விடுவித்துள்ளது. இயந்திரங்கள் சக்தியின் வடிவங்கள், விடுதலை இயக்கங்களின் வழியே மக்களின் சக்தி பேரளவில் வெளிப்படுகிறது. இரஷ்யப்புரட்சி ஒரு மாபெரும் சக்தி. பெண்கள் சக்தியின் இன்னொரு வடிவம். பிரபஞ்சம் அளவற்ற சக்தியை வெளியிடுகிறது. பாரதி இத்தகைய சக்தியைப் பாடுகிறார், போற்றுகிறார்.

பாரதி பல தெய்வங்களைப் பாடுகிறார் என்பது உண்மை என்றாலும், விநாயகரைப் பற்றியும் முருகனைப் பற்றியும்

பாடும்பொழுது பாரதியின் பார்வையில் இவர்களும் முழுமுதற் சக்திகள். பாரதியின் அத்வைதப் பார்வை, கண்ணன், புத்தன், இயேசு, அல்லா முதலியவர்களை ஒன்றின் பல வடிவங்களாகக் காண்கிறது. பாரதியின் தெய்வம் மனிதருக்கு நெருக்கமானது. சுத்த அறிவே தெய்வம் என்றும் பாரதி பாடுகிறார். காக்கை, குருவி, கடலும் மலையும் அவருக்குத் தெய்வங்கள்.

பாரதியின் அத்வைதம் குறித்து இங்கு மீண்டும் பார்க்கலாம். தியான நிலையில் மட்டுமே இந்த ஒருமை நிலை வாய்க்கும் என்பது உண்மை இல்லை. பரமஹம்சர், விவேகானந்தர், அரவிந்தர், இரமணர் முதலிய யோகிகளுக்கு மட்டுமே இந்த ஒருமை நிலை வாய்க்கும் என்பது உண்மை இல்லை.

ஒருமலரை நாம் உற்று கவனிக்கும்பொழுது ஒரு கனத்தில் அந்த மலரும் நாமும் ஒன்றாகிறோம். மலர் நம் ஆளுமையின் பகுதியாகி விடுகிறது. இப்படித்தான் காடும் மலையும், கடலும் ஆறும் நமக்குள் இணைகின்றன. குழந்தையோடு கொஞ்சும்பொழுது குழந்தையும் தாயும் ஒன்றாகின்றனர். காதலர்கள் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. வகைவகையாய் உணர்வுகள் நமக்குள் வாய்க்கின்றன. வெட்டவெளியில் நிற்கும்பொழுது ஒரு கணத்தில் நாம் இல்லை. எங்கும் வெட்ட வெளி. வெட்டவெளிக்குள் நாம் இரு:கிறோம். காலைக் கதிரவன் ஒளியில் தான் விளைவித்த நெல் வயல்களுக்கு இடையில் ஒரு விவசாயி நடந்து செல்லும்பொழுது, காற்றில் ஆடும் நெற்பயிரும் இவரும் ஒன்றாகின்றனர். வரலாற்றில் மனிதன் இப்படித்தான் தன்னைப் பெற்றான்.

கவிஞர்கள் இயல்பாகவே அத்வைதவாதிகள். தியானத்தின்போது என்ன நடைபெறுகிறது. பிறந்தது முதல் நமக்குள் வந்து இணைந்திருக்கிற இயற்கை முதல் பிரபஞ்சம் இறுதியாக எல்லாமே நமக்குள்ளிருந்து எழுகின்றன. ஒரு கணத்தில் நாம் மறைந்து பிரபஞ்சமயமாகிறோம். வாழக்கையின் முழுப்பரப்பும் நமக்குள் விரிகின்றன. குன்று ஏறி யானைப்போர் கண்டது போல ஒரு பெரும் காட்சியை நாம் பெறுகிறோம். இங்கிருந்து பார்க்கும் பொழுது பகைமைகள் இல்லை. முரண்கள் இல்லை. எல்லாமே அன்பு மயம், நாமும் அவையும் என்ற வேறுபாடு இல்லை.

தியானத்தின்போது இந்த ஒருமை நிலை தீவிரப்படுகின்றது அன்றி எல்லா மனிதரிடத்திலும் அவ்வப்பொழுது சில கணங்களில் பெற்ற அனுபவம் என்பது அன்றி இது வேறில்லை. இது ஓர்

பேரனுபவம் அகண்ட பார்வையில் எல்லாவற்றையும் உள்ளடக்கிப் பார்க்கிற அனுபவம். எல்லாமே அந்த அந்த இடத்தில் இணைகின்றன. பகைவனும் நம்மை வளர்த்துள்ளான். தடைகள், நெருக்கடிகள் நம் ஆளுமை வளர்ச்சிக்கான சாதனங்கள். ஒருமை நிலையின் பரவசம் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. போர்க்களத்தில் அர்ச்சுனன் கண்ட பேரண்ட தரிசனம் நமக்கும் உரியது. வரலாறு சமூகம் பற்றிய தீவிரமான பார்வைகளுக்கு இப்படி ஒரு அனுபவம் இல்லாமல் முடியாது.

வேறுபாடுகள், முரண்பாடுகள் அற்றுப் பிரபஞ்சம் வாழ்க்கை முதலியவற்றைப் பார்ப்பது ஒருநிலை. இதுவே முழு உண்மையென்று இல்லை. இது ஓர் பேரனுபவம், தேவையான அனுபவம். இது சில கண அனுபவம் அப்புறம் நாம் கடலாகிவிடுவதில்லை. மேல்கீழ் வேறுபாடுகள் இல்லாமல் இல்லை. கறுப்பும், சிவப்பும் ஒன்று அல்ல. நானும் காக்கையும் ஒன்று அல்ல. பொருள்கள் முதலியவை வேறு வேறாக இருக்கின்றன. எல்லாவற்றையும் ஊடுருவி உள்ளது பொருண்மை என்பதனால் பொருள்களுக்கிடையில் வேறுபாடுகள் இல்லாமல் இல்லை.

ஆழ்ந்து பார்த்தால் அடிப்படையில் மூன்று வகையான பார்வைகள் உள்ளன. ஒன்று நாமும் உலகமும் ஒன்று. இது ஒருமைநிலை. இரண்டு நாமும் உலகமும் வேறு - இது இருமை நிலை. மூன்று நமக்குள் உலகமும் உலகத்திற்குள் நாமும் இருக்கிறோம். இது இரண்டற்ற நிலை. அடிப்படையில் பார்வைகள் மூன்று என்றபோதிலும் பார்வைகள் இன்னம் விரிவு பெறலாம்.

பாரதியை இன்னும் ஆழ்ந்து பார்க்கலாம். விவேகானந்தரைப் போல ஒருமை நிலையின் உச்சத்தில் எந்நேரமும் பாரதியும் இருக்கவில்லை. மலையின் உச்சியில் வாழமுடியாது. தரைக்கு வரவேண்டும். ஒருமை நிலையைத் தியானத்தில் அனுபவித்தால் போதாது. சமூகத்திற்குள்ளும், பொருளியலுக்குள்ளும் அந்தப் பார்வை விரிவு பெறவேண்டும். சாதிகளுக்கு இடையில் வேற்றுமை தேவையில்லை. பொருளியலில் ஏற்றத்தாழ்வுகளுக்குத் தேவையில்லை. சமதர்மம்தான் தேவை. அத்வைதம் என்பதை இப்படிப் பொருள்படுத்த இயலுமானால், பாரதியை நம்மால் வெறுக்க முடியாது.

பாரதியிடம் இருந்த பார்ப்பனியம் பற்றி இப்பொழுது பார்க்கலாம். அரசியல், மெய்யியல் முதலிய எல்லாவகைக் கருத்தியல்களுக்குள்ளும் இரு எதிர்நிலைப்பாடுகள் உண்டு. ஒன்று

வலசாரிப் போககு. இன்னொன்று இடசாரிப்போக்கு. ஒன்றை மிதவாதம் என்றும் இன்னொன்றைத் தீவிரவாதம் என்றும் சிலசமயங்களில் நாம் சொல்கிறோம். மார்க்சியம், பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம் முதலிய எல்லாவற்றினுள்ளும் இப்படி இருவேறு எதிர்நிலைகள் உண்டு. புத்த மதத்தினுள்ளும் இவ்வகைப் போக்குள் உண்டு. கிறித்துவம் முதலியவற்றினுள்ளும் இவ்வகை எதிர்நிலையைக் காணமுடியும். எந்த மதத்தினுள்ளும் எதிர்நிலைக்கு இடம் உண்டு. ஒன்று ஆதிக்கச் சார்பு. இன்னொன்று மக்கட்சார்பு. முதலாளியத்தோடு ஒத்துழைக்கிற மார்க்சியம் வலசாரிப்போக்கு. முதலாளியத்தைக் கடந்து செல்கிற மார்க்சியம் இடசாரிப்போக்கு. ஆதிக்கவாதிகளோடு ஒத்துழைக்கிற புரோகிதம் வலசாரிப் போக்கு. ஆதிக்கங்களுக்கு எதிராக செயல்படும் தீர்க்கதரிசனம் மக்கட்சார்பு.

பார்ப்பனியத்தினுள்ளும் தொடக்க காலம் முதல் இன்றுவரை இப்படி எதிர்நிலைகள் உள்ளன. சாதி, பூணூல்,மந்திரம், சடங்கு, அதிகாரம் முதலியவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ள பார்ப்பனியும் ஆதிக்கவாதிகளோடு ஒத்துழைக்கிற பார்ப்பனியம். பிரம்மம் எங்கும் உள்ளது, எல்லோருக்குள்ளும் இருக்கிறது. இதற்குப் பெயர் . இல்லை, உருவம் இல்லை. இதன் முன்னிலையில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. சாதி வேறுபாடுகள் இல்லை. ஆதிக்கங்களுக்கு இடம் இல்லை. இப்படிச் சொல்லுகிற பார்ப்பனியம் இடசாரிப் பார்ப்பனியம்.

இத்தகைய பார்ப்பனியம் வேதத்தைக் காட்டிலும், உபநிடதங்களில் கூடுதலாக இடம்பெற்றுள்ளன. விவேகானந்தர் இத்தகையவர். பாரதியின் பார்ப்பனியமும் இவ்வகைப்பட்டது. மக்கள் சார்பிலிருந்துதான் பாரதி எல்லாவற்றையும் பார்க்கிறார். மக்களிடமிருந்து என்றும் இவர் முரண்படவில்லை. இவரது பார்வையில் எல்லோரும் மேன்மையானவர் ஆரியர்கள். நந்தனும் ஒரு பார்ப்பான். வேர்க்க வேர்க்கப் பொருள் செய்வது ஒன்றையே போற்றும் பார்ப்பனர் வெறுக்கத்தக்கவர். அரவிந்தரைக்கூட பாரதி ஒருசமயம் வெறுத்தார். தாழ்த்தப்பட்டவர் என்று சொல்லப்பட்டவருக்கு பூணூல் அணிவித்தார். இத்தகையவரைப் பார்ப்பனர் என்று சாடுவதில் நேர்மை இல்லை.

பாரதியை நாம் இழப்பதற்கில்லை. தமிழை அவர் நேசித்தார். பெண் விடுதலை வேண்டினார். சித்தர்களோடு அவரும் ஒரு சித்தர். சாத்திரம், சடங்குகள் முதலியவை அவரைப் பற்றிக்கொள்ளவில்லை. அவரிடம் இருந்த இந்துமதம், இந்துத்துவமாக ஒருபோதும் உருக்கொள்ளவில்லை. இந்துத்துவத்திற்கு

அவர் இரையாகவில்லை. அவரிடம் இருந்த திலகர் வெறுப்புக்குரியவராக இல்லை. அவரைப் பற்றி இருந்த மதம் மார்க்சின் சொற்களில் சொன்னால் இதயமற்ற உலகின் இதயம், ஆன்மா அற்ற உலகின் ஆன்மா. பாரதியின் வாழ்க்கையில் நெருக்கடிகள் அதிகம். ஆகவே அவரிடம் மதம் சிறிதளவு அபினாக இருந்தது.